தென்மொழி

எச்சரிக்கை

முன்னம் பறித்த
  முழுமைத் தமிழ்நிலத்தைத்
தன்றால் திருப்பித்
  தராமல் இருப்பாரேல்
கன்னல் தமிழ்மொழியால்
  கட்டுண்டு பாய்ந்தெழுந்தே
இன்னல் விளைப்போமென
  றெச்சரிப்பாய் பூங்குயிலே!

நளி (கார்த்திகை) தி. பி. [illegible]

௫0 காசு

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-4 | கார்த்திகை தி. பி. ௧௯௯௭ (1966 நவம்பர்) | ஓலை-10

அரசியல் காட்டு மிராண்டிகள்!

அண்மையில் நடந்த ஆந்திர மாநிலக் கலவரங்களையும், வட நாட்டுப் பகுதிகளில் நடந்த மாணவரின் அடாவடித்தனங்களையும், துறவுப் போர்வையில் ஆரியப்பார்ப்பனர் நடத்திய வெறித்தனங்களையும் கூர்ந்து நோக்கும் பொழுது நமக்குக் கடுவெளிச்சித்தரின்

நந்தவனத்தி லோர் ஆண்டி –அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தா னொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

–என்ற பழைய பாடல்தான் நினைவிற்கு வருகின்றது. உரிமை தெரியாதவர்களிடம்-அல்லது குடியாட்சிக்குப்போதிய மன வளர்ச்சியற்ற காட்டு மிராண்டிகளிடம் வெள்ளைக்காரன் தன்னுரிமையைக்கொடுத்து விட்டுப் போய் விட்டானே என்ற வருத்தந்தான் மேலிடுகின்றது.

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:- தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

இப்படிக் கூறியவுடன் தன்னுரிமை மிக்க ஒருசிலர் நம்மேல் சீறி விழலாம். ஆனால் அவர்தம் சீற்றத்திற்கு அஞ்சி நாம் சில உண்மைகளைக் கூறாமல் இருக்க முடியவில்லை, தன்னுரிமை பெற்ற இந்தியாவில் இதுவரை நடந்த காட்டுமிராண்டித்தனமான நிகழ்ச்சிகளைவிடக். காட்டு மிராண்டித்தனமற்ற நிகழ்ச்சிகளை எண்ணுவதென்பது மிகவும் கடினமான ஒரு செயலாகும். (இவற்றில் அரசினர்தம் போக்கும் அடங்கும்)

இந்தியாவின் புறப்பகைவர்களாக இருப்பவர்கள் கொடுக்கும் மறைமுகமான தொல்லைகளைவிட, அகப்பகைவர்களாக இருக்கும் பேதைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தொல்லைகளே கணக்கிலடங்காதவையாகவும், அடக்கி ஒடுக்க முடியாதனவாகவும் இருக்கின்றன. இது பற்றி நாம் பலமுறை அரசினர்க்கும் (அரசா இது?) மக்களுக்கும் (மக்களா இவர்கள்?) பலவாறு எடுத்துக் கூறியிருக்கின்றோம். ஆனால் நேர்மையாகச் சொல்லப்படும் உண்மையான கருத்துகளைச் செரிக்கும் ஆற்றலற்ற இங்குள்ள போலி அரசியல்காரர்களும், காலித்தனமான அரசியல் அதிகாரக் காரர்களும் இவை போன்றவற்றிற்கு என்றுமே செவி சாய்ப்பதில்லையே! பொதுவாகச் சொன்னால் அரசியல் பதம் பெறாத இந்நாட்டு மக்கள் ஆட்சிக் கேற்ற மக்களும் அல்லர்; இங்குள்ள ஆட்சியாளரும் (அவர்களும் அத்தகைய மக்களிலிருந்து தோன்றியவர்கள் தாமே) இந்நாட்டுக்கேற்ற அரசினரும் அல்லர். இந்த இரண்டு நிலைகளும் உள்ள வரை - திருந்திக் கொள்ளாத வரை, வெள்ளைக் காரக் குயவனை ஐம்பதாண்டுகளுக்கு மேல் வேண்டிப் பெற்ற தன்னுரிமை என்ற தோண்டியை. 'இப்படிக் கூத்தாடிக் கூத்தாடிப்போட்டு உடைத்து விட்டு, அமெரிக்கனிடமோ, உருசியனிடமோ சென்றுதான் பழுது பார்த்துக் கொண்டு வர வேண்டியிருக்கும்.

அரசியல் தன்னுரிமை என்பது எப்படிக் கேட்டுப் பெறுவதாக இல்லையோ, அப்படியே கேட்டுப் பறிக்கப்படுவதாகவும் இல்லை. உரிமையின் மதிப்புத்தெரியாதவர்களிடம் உரிமை கொடுப்பது, சிரங்கு பிடித்தவன் கையில் இரும்பைக்கொடுப்பது போலாகும். இல்லையானால் மக்கள் வாழ்வதற்காகக் கொடுக்கப்பட்ட உரிமையை 'இங்குள்ள மாட்டுக்கும், ஆட்டுக்கும் கொடு' என்று சண்டித்தனமாகப் போராடிக் கொண்டிருப்பானா? விளையாட்டுப் பிள்ளை கையில் தின்பண்டத்தைக் கொடுத்தால், அது தன் கைப்பாவைக்கும் கொடுக்க

வேண்டும் என்று அடம் பிடிப்பதைப் போன்ற பிள்ளைச் செயலேதவிர, இவ்வேண்டுதலில் அறமோ, அறிவோ, இருப்பதாகக் கருத முடியாது. இவ்வெல்லாச் சிக்கல்களுக்கும் அடிப்படையான காரணம் ஒன்று உண்டு; அதுதான் இந்நாட்டு அரசியலைப் பார்ப்பனர்கள் கைப்பற்றிக் கொள்ள வாய்ப்பளிக்காமை ஆகும்.

முற்றி முதிராத–மக்களின் போக்கறியாத–தான் தோன்றித் தனமான வெறியர்களே, செல்வர்களின் துணைக்கொண்டு அரசியல் பதவிகளைக் கைப்பற்றி அதிகாரச் சூறையாடுகின்றார்கள் என்பது ஒருபுறமிருக்க, அத்தகைய சூறைக்காரர்களை அடக்கி–அல்லது புறந்தள்ளிப் புதிய அரசை அமைப்பது என்பது எவ்வகையில் நடைபெறுவது என்று கணிக்கப் பெறுவதும் இன்றியமையாததாகும். 'சட்டிக்குத் தப்பி நெருப்பில் விழுவதைப்'போல மக்கள் இக்கால் இருக்கின்ற அரசியல் அழுத்தக்காரர்களை அகற்றும்பொழுது, அவ்வரசியல் முன்னிருந்தவர்களை விட இன்னும் பழுத்த கொள்ளையர்களின் அல்லது காட்டுமிராண்டிகளின் கையில் கிடைத்து விடாதபடி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இனி, இன்னும் விளக்கமாகச் சொன்னால், நாம் நமக்குத் தகாத அரசை அகற்றுதற்கு எத்துணை விழிப்பு கொண்டுள்ளோமோ, அதைவிட அவ்வரசை எவர்கையில் கொடுப்பது என்பதில் மிகுதியான விழிப்பு கொண்டிருக்கவேண்டும். தீயோனை ஒழிக்கப் பலர் முன்வரலாம். அப்பலரில் அத் தீயோனை விட மிகக் கொடியோனும் இருக்கலாம் என்பதே அரசியல் உண்மை. நாம் ஏற்கனவே நலிந்துள்ளோம் என்பது முதலில் நமக்கு நினைவிருக்கவேண்டும். ஆனால் அதைவிட இனி நாம் நலியக்கூடாது என்பதும் நன்றாக நினைவில் இருக்கவேண்டும். காரணம் மிகவும் வலிவாகவும் பொலிவாகவும் இருந்த பொழுதே நலிய வைத்த நம்மை, இனி வரப்போகின்றவர்கள் கொடியவர்களாயிருந்து விடுவார்களானால், (நாம் எதிர்த்துப்போராட ஏற்கனவே வலிவற்றவர்களாயிருப்பதால்,) நாம் அவர்களைத் தடுத்து நிறுத்துவதும், அல்லது அகற்றுவதும் இயலாத தொன்றாகவே போய்விடு மன்றோ? எனவேதான் இப்பொழுதுள்ள ஆட்சியாளரையும் அவர்களின் தில்லுமல்லுகளையும் நன்றாகப் புரிந்து கொண்டுள்ள நாம், இவர்களை எதிர்க்கின்றதாகக் கூறிக் கொள்ளுபவர்களையும், அடுத்து ஆட்சி மன்றம் ஏறத் தகுதியுள்ளதாக மார் தட்டுகின்றவர்களையும் இன்னும் மிக நன்றாகப் புரிந்துகொள்ளல் வேண்டும். பட்ட துயருக்காக

வருந்திக் கொண்டிருக்க முடியாது. ஆனால் இனிப் படுந்துயருக்காக இப்பொழுது வருத்தத்தொடும் கவலையொடும் எண்ணிப் பார்த்தே ஆகல் வேண்டும்.

இப்பொழுது இதைப்பற்றியெல்லாம் ஏன் சொல்ல வந்தோ மென்றால், திருடன் மேல் கல்லெறிபவன் யார் என்ற இனங்கண்டு கொள்ளவே. திருடன்மேல் கல்லெறிந்தான் என்பதற்காகவே நாம் அவனைப் பின்பற்றிப் போவது, நம் அரசியல் அறியாமையையும் குருட்டுத் தனத்தையுமே காட்டுவதாகும். திருடன்மேல் கல்லெறிந்தவன் உண்மையிலேயே நம்மேல் இரக்கப்பட்டவனா, இல்லை அவனைவிடப் பெரிய திருடனா என்று நாம் பார்க்கக் கடமைப் பட்டவர்கள் ஆதலால்தான், இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் கல்லெறி சண்டையின் அடிப் படை என்ன? அவ்வாறு கல்லெறிபவன் நம்பத்தகுந்தவனா? என்றெல்லாம் நாம் ஆராய வேண்டியுள்ளது.

முதலில் நம் நாட்டு மக்கள் அரசியல் தெரிந்தவர்களா இல்லையா என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் எளிய வழி ஒன்று உண்டு அவர்கள் தங்களுக்குப் பிடித்த அல்லது தாங்கள் உறுப்பினராயுள்ள கட்சியின் செய்தித் தாள்களை மட்டும் படிக்கின்றனரா ? இல்லை பிறகட்சித் தாள்களையும், வேறு நடு நிலையானவர்கள் நடத்துகின்ற தாள்களையும் படிக்கின்றனரா என்று பாருங்கள், இவர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். எந்தச் செய்தித் தாளையும் படிக்காதவன் அரசியல் பற்றிக் கவலையில்லாதவன். இராமன் ஆண்டால் என்ன? இராவண்ணன் ஆண்டாலென்ன என்ற, கருத்தற்ற பேதை. இவன் முதல் வகை. ஆனாலும் இப்படிப்பட்டவர்களே நம் நாட்டில் பெரும்பாலானவர்கள். உண்மையாகச் சொன்னால் இந்தத் தூங்குகின்றவர்களின் தொடைகளை நம்பியே போலி அரசியல் காரனும் உண்மையான அரசியல் காரனும் கயிறுதிரிக்க வேண்டியுள்ளது. இனி, தம் கட்சித் தாள்களை மட்டுமே விழுந்து விழுந்து படிப்பவர்கள். இவர்கள் இரண்டாந் தன்மையர். பேதையுள் பேதைகள்; படித்த முட்டாள்கள்; ஆனால் இவர்களே ஒரு கட்சிக்குத் தூண்கள். பிறரைத் தம் கட்சிக்கு இழுப்பதற்காகத் தம்மையே இழக்கும் தூண்டிற் புழுக்கள்! இத்தகையார் விழித்துக் கொண்டே தூங்குபவர்கள். யாராலும் இவர்களை எழுப்பிவிட்டு விட முடியாது. இவர்களுக்கு

இரண்டே நிலைகள். ஒன்று இவர்கள் கட்சியில் சேருமுன் இருந்த நிலை; இரண்டு கட்சியில் சேர்ந்தபின் இருக்கின்ற நிலை. இவர்களைப் பற்றி அரசியல் கட்சித் தலைவர்களுக்கு என்றும் கவலையில்லை; இவர்கள் கட்டிவைக்கப் பெற்ற நாய்கள்.

இனி, மூன்றாவது தன்மையர் தம் கட்சித் தாள்களை மட்டுமன்றிப் பிற கட்சித் தாள்களையும் படிக்கின்ற ஆவலுடையவர்கள். இவர்கள் அரசியல் மாணவர்கள். அரசியல்பற்றி ஓரளவு தெரிந்தவர்கள்; மேலும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்ப முடையவர்கள். இத்தகையவர்களில் பாதிப் பெயர் தெளிவும், மீதிப்பெயர் தெளிவற்றும் இருப்பவர்கள். தெளிவுற்றவர்கள் ஒரேகட்சியில் இருந்து கொண்டு பிறகட்சிகளின் நடவடிக்கைகளையும் அறிந்து கொள்ளும் தன்மையால், தம் கட்சிக்கு முன்னோடியாக இருப்பவர்கள். இவர்களுக்குத் தம் கட்சிகளில் நம்பிக்கையும், ஈடுபாடும், இன்னும் பச்சையாகச் சொன்னால் அவற்றால் வருவாயும் இருக்கும். இவர்களே அரசியல் கட்சியின் துருப்புகளைப் போன்றவர்கள் ஆவார்கள். இவர்களில் இன்னொரு சாரார் தாங்கள் ஒருகால் கொண்ட கொள்கை பிழையென்று கண்டால், தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு, தங்களுக்குப் பிடிப்பான கொள்கைகளுக்காகப் பாடுபடுபவர்கள். இவர்கள் ஓரளவு கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகையால் ஓரளவு நேர்மையானவர்கள்.

இனி, நான்காவதாக உள்ளவர்கள் எல்லாக் கட்சித் தாள்களுடனும், நடுநிலையான கருத்துடைய தாள்களையும் அரும்பாடு பட்டு வாங்கிப் படிப்பவர்கள். இவர்களே ஒரு நாட்டின் உண்மையான அரசியல் அறிவுடையவர்கள். இவர்கள் நம் நாட்டில் மிகக் குறைவு. இவர்கள் கட்சித் தலைமையையோ ஆட்சித் தலைமையையோ துளியும் விரும்பாதவர்கள். ஆட்சிபற்றிய உண்மையான அறிவிருப்பதால் தம் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அத்தகைய பெரும் பொறுப்புகளுக்கு என்றும் விருப்பமில்லாதவர்கள். இவர்கள் ஆட்சியில் நேரடிப் பொறுப்பேற்காவிடினும் அரசியல் மலர்ச்சிக்குக் கருவாகவும் எருவாகவும் இருந்து நாட்டைப் பேணுபவர்கள். இவர்களுக்கே மக்கள் பற்று, நாட்டுப்பற்று மிகுதியும் இருக்கும். இத்தகையவர்கள் மக்களின் மேய்ப்பர்களாக இருந்து, அவர்களுக்கு மெய்த்தொண்டு

செய்பவர்கள். இவர்கள் உண்மையும் நாணயமும் உள்ளவர்களாகை யால், இவர்களுக்கு எல்லா வாய்ப்புகளும் மிகவும் குறைவாகவே இருக்கும்.

நம் நாட்டில் உள்ள இந் நால் வகை மக்களையும் நூற்று விழுக் காட்டில் பிரிப்போமானால் அவர்கள் முறையே 50, 25, 20, 5 என்ற பாகுபாட்டில் இருப்பர். இன்னும் விளக்கமாகச் சொன் னால் இவர்களில் முதல் வகையினர் ஏமாறுந் தன்மையினர்; இரண்டாந் தன்மையர் ஏமாறுபவர்; மூன்றாந் தன்மையர் ஏமாற்றுபவர்; நான்காந் தன்மையர் எதிலும் ஏமாறாதவர். இந்த விளக்கம் இவ்விடத்தில் தேவையற்றது போல் தோன்றினும் நேற்றோ, இன்றோ, நாளையோ கூறப்படும் எல்லா அரசியல் கருத்துகளுக்கும் இஃது ஓர் உண்மை யான நிலைக்களனாகும்; வலிவான அடிப்படையாகும். அத் தன்மையி லேயே இங்குக் கூறப்பெறும் கருத்துகளுக்கும் பொருள் கொள்ள வேண்டும்.

இக்கால் இந்தியாவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் காட்டு மிராண் டிச் செயல்களின் புறத்தோற்றம் முழுக்க முழுக்க அறவுணர்வைக் கொண்டது போலத் தோன்றினும் — பச்சையான அரசியல் பின்னணி வாய்ந்த வெறிச்செயலாகும் என்பதை நாம் மேலே கூறிய நடுநிலை அரசியல் கண்ணோட்டம் வாய்ந்தவர்கள் தெளிவாகஉணருவர். தாமும் ஏதாவது ஒரு வகையில் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள்தாம் இப் போராட்டங்களின் உண்மைத் தன்மைகளை மறைத்துப் பேசவோ, குறைத்து மதிப்பிடவோ செய்வார்கள். அத்தகையார்க்கு நாம் சொல்லுகின்ற இந்த உண்மை சிறிது கசப்பாகவே இருக்கும்.

இந்தியா அடிமைத் தளையை அறுத்து 20 ஆண்டுகளே ஆகின்ற படியால், தன் மடித்துயில் களைய இன்னும் தன் வலிவான முயற்சியை ஈடுபடுத்த வேண்டியுள்ளது. அதற்குள் இந்நாடு எழுப்பிக்கொண்ட சிக்கல்கள் ஏராளம். அறிந்தோ அறியாமலோ தான் எழுப்பிக்கொண்ட சிக்கல்களில் தானே திக்கித்திணறித் தன்னை விடுவித்துக் கொள்ளு முன், இந்நாட்டு அரசியலைச் சேறுய்க் குழப்பிக் கொண்டிருப்பவர்கள் எல்லாரும் தந்நலக்காரர்களே! அரசியல் தலைவர்களின் எழுச்சித் தீ பற்றிக் கொண்டுள்ள இந்நேரத்தில், அவ் வெறியில் எண்ணெய் இடு வது போலச் சமயத் தலைவர்களின் எழுச்சி இப்பொழுது தொடங்கி

புள்ளது. இவர்கள் உண்மையான சமயத் தலைவர்களுமல்லர். போலியான குருட்டு நம்பிக்கைகளுக்குத் தம் ஆடைகளையே களைந்தெறிந்த அம்மணக் காட்டு மிராண்டிகளே ஆவர். அவர்களின் அகத்தே கனன்று கொண்டிருப்பது ஆவின் மேல் கொண்ட இரக்கவுணர்வு அன்று! அன்று எரிந்து அடங்கிப்போன ஆரிய நெருப்பு! அந் நெருப்பை ஊதிவிட்டுக் கொண்டிருப்பவரும், அதில் ஆநெய் ஊற்றிக் கனல்விப்பாரும் கலப்பற்ற ஆரியப் பார்ப்பனர்கள்! அவர்கள் மூட்டுகின்ற தீயில் குளிர் காய்ந்து கொண்டிருப்பவர்கள் எல்லாரும் ஆரிய அடிமைகளே!

அவர்களின் எழுச்சிக்குக் காரணம் இந்தியா தன் ஆரியத் தன்மையை இழந்து, உலக மக்களின் பொதுமைத் தன்மையில் அடியெடுத்து வைப்பதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருப்பதைக் காணப் பொறுததே ஆகும். அம் முயற்சிகளை முறையே செய்து முடிப்பார்களாயின், தங்களின் ஆரியப் பண்பாடு குலைந்து. ஆரிய இனம் அடக்கப்பட்டு விடுமே என்கின்ற அச்சத்தாலேயே, இன்று அம் மணுண்டிகளெல்லாம் தீப்பந்தங்களை ஏந்தத் தொடங்கி விட்டனர். இந்த அகப்புகைச்சலின் புற நெருப்பே வடவரின் 'மாட்டுப் போராட்டங்கள்.'

எனவே அரசியல் பின்னணி கொண்டு இயங்கும் இக் காட்டு மிராண்டிச் செயல்களை, உண்மையான மக்கள்போராட்டம் என்று எவரும் கருதிவிட வேண்டா. தென்னாட்டு ஆரியப் பார்ப்பனர்கள் இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் ஈடுபடாதபடி இங்குள்ள திராவிடக்கூட்டுணர்வு தடுத்துக் கொண்டுள்ளது என்பதை உண்மையறிவினர் புரிந்து கொள்ள வேண்டுகின்றோம். தூங்குகின்ற பேதை மக்களைத் தட்டியெழுப்பி, அவர்களுக்கு அரசியல் வெறியூட்டித் தங்களின் ஆட்சிமாற்றத் தேவைக்குப் பயன்படுத்திப் பதவிப் பசியாற்றிக் கொள்ளும் அரசியல் கொள்ளைக்காரர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள். மற்றும், காலம் இடங்கருதி வெளிப்படையாகச் சில கருத்துகளைக் கூறும் வரை, இலை மறை காயாகக் கூறப்பெறும் இத்தகைய கருத்துகளின் அடியூட்டங்களை உண்மைத் தமிழன்பர் உய்ந்துணர்ந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

—பெருஞ்சித்திரன்.

-அவர் நினைவாக.

தமிழ்நாடு தன்னாட்சி பெறுக!

பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழர் தூங்கிய நாளில் ஆரியர்
தமிழில் ஆரியச் சழக்கைச் சேர்த்தனர்;
தமிழர் விழித்தஇந் நாளில் ஆரியர்
"ஆரியக் கலப்பிலாத் தமிழும் உண்டோ?"
"தமிழுக் காரியம் தாய்எனல் பொய்யோ?"
என்று தமைமறந் தியம்பு கின்றனர்.

இமையம் தொடங்கிக் குமரி வரைக்கும்
தமிழரே தழைந்து வாழ்ந்தஅந் நாளில்
பிழைக்க வந்த பிச்சைக் காரர்கள்
இந்நாள் தமிழரை நோக்கி இயம்புவர்;
"வண்தமி ழர்க்கொரு வரலா றுண்டோ?"
"வாழ்க்கை முறையொன்று வாய்ந்த துண்டோ?"

ஆரியர் ஆணவ மிக்க ஒற்றுமை
வாய்மை என்பதன் வலியையும் அடக்கித்
தீய வழியே சென்று தாயக
ஆட்சியை அடைந்த தாயினும் வாய்மை
சாகா தென்பதைச் சழக்கர் அறியார்;
சாகாத் தமிழத் தலைமுறை அறியும்;

தமிழகத் தையும் தமிழையும் மீட்கத்
தமிழர் ஒற்றுமை தாங்கி எழுந்தனர்;
ஆரியர் அதுகண் டலறு கின்றனர்
அதனா லன்றோ "எம் ஆரியந்தான்
தனிமொழி தனிமொழி! யாமே தக்கவர்
ஆரியர் ஆள்வதே முறைமை" என்று
வையக மெல்லாம் புளுகு மொழியும்
பெருநிறு வனங்கள் பரப்பு கின்றனர்?

... ...

என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்.
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மதிலே!

உலக விளக்கம்!

துரை-மாணிக்கம்

(உலகியல் உண்மைகளை வகைப்படுத்திப் பன்னிராண்டுகட்கு முன்பு எழுதிய பாடல்கள் இவை! அன்பர் நலங்கருதி ஈண்டு வெளியிடப் பெறுகின்றன.)

முன்னுரை.

கடுகென முளைத்துக் கல்லென வளர்ந்து
கடுமலை யெனப்பெரி தாகிப்
படுகுழி யிறக்கும் பற்பல பிழைகள்
பழிச்செயல் இவற்றினை நீக்கி
விடுகென மக்களை வேண்டியும், நெஞ்சில்
விரியுல குய்ந்திட, அன்பை
நடுகென வேண்டியும் நவின்றனன் இந்நூல்!
நாட்டினர் யாவர்க்கும் பொதுவே!

1. உலகு.

நீர்பொது; நிலம்பொது; நெடுவான் வெளிபொது;
ஞாயிறும் நிலவதும் பொதுவே;
ஊர்பொது; உயிர்பொது; உயிருடற் காகிடும்
உணவெனும் பல்வகை பொதுவே!
ஏர்பொது; இவற்றின் எவ்வகை விரிவும்
எல்லவர்க் கும்,பொது பொதுவே!
பார்பொது; சீர்பொது; பல்வகைப் பொருள்பொது;
பகுத்தலும் வகுத்தலும் ஏனோ?

2. பிறப்பு.

பிறப்பால், பிறங்குடல் உறுப்பால், உணர்வால்
பெருவலி திறனெனும் இவற்றால்
சிறப்பால் அறிவால் செயிர்ப்புயிர்ப் பிவற்றால்
செரிப்பரிப் பெனும்பிற வகையால்
இறப்பால் மக்களும் மாக்களும் புட்களும்
எனமுவ வகையுயிர் உளவால்!
அறப்பால் அறியா தாயிரம் பிறப்பென
அரற்றலும் புரட்டலும் ஏனோ?

3. உறுப்பு.

உயிர்ப்பும் உணவும் உயிர்க்கெலாம் பொதுவே!
உறையுளும் உடையுமென் றிவையே
பயிர்ப்புள மாந்தர் பயில்தனிப் பொருளே!
பறவையும் மாக்களுந் துணையே!
பயிர்ப்பில மாக்கள் பறவைகள் இவையே
படுவினை வுண்டிட, மாந்தர்
புயல்வயல் தம்மால் புலம்விளைத் துண்ணப்
பொதுத்தடை கூட்டிடல் மடமே!

4. உழைப்பு.

விளைந்தன உண்ணுவ புட்களும் மாக்களும்!
விளைத்துயிர் புரக்குவர் மாந்தர்
வளைந்துடல் வாடி வெயின்மழை நுழைந்து,
வளையா மக்களுக் கீந்து
கிளைந்துயிர் தழைக்கக் கருதிடும் உழுவோர்
கேடுறில் நிலங்கே டுறுமே!
களைந்தவர் துயரைக் காடுநா டாக்கக்
கருதா திருந்திடல் கேடே!

5. உழவு.

எவ்வகைத் தொழிற்கும் ஏர்கருப் பொருளே!
இறங்குவான் நீர்நிலங் காற்று
செவ்வெரி ஞாயிறு சேர்ந்தள வொன்றிச்
சினைத்தலர்ந் துறுபயன் விளைக்கும்
செவ்வகை யுழவே பல்லுயிர் முகிழ்ப்பு!
சீர்ப்பெற வைத்தலு மஃதே!
இவ்வகைத் தொழிற்கே இடுகாப் பளியா
திருந்துயிர் வருந்துதல் இழிவே!

6. பொருள்.

விளைபொருள் விளையா வினைப்பொரு ளெனுமிரு
வகைப்பொரு ளாகுமிப் பொருளுள்
விளைபொருள் நாட்டம் விழைந்துள நாடே
வீழ்வுயிர் புரந்திடும் நாடாம்!
விளைபொருள் வளரும்! வினைப்பொருள் தளரும்!
விளைபொரு ளாம்வே ளாண்மை!
கிளையாம் பிறவே! கவினுல காள்வார்
கேடற விளைத்தலுந் தலையே!

7. நாடு.

வளர்ந்தது காடு! வளர்ப்பது நாடு!
வளம்பல சேர்ப்பதும் நாடே!
கிளர்ந்தது காடு! கிளைப்பது நாடு!
கேடறக் காப்பதும் நாடே!
தளர்ந்தது காடு! தளிர்ப்பது நாடு!
தாள்வினை கொள்வதும் நாடே!
அளர்ந்தது காடே! அலர்வது நாடே!
அறியா ரறிவறி யாரே!

8. அரசு.

உலகப் பொதுமை காத்தலும் காத்தே
உயிர்பிறப் பொற்றுமை உணர்ந்தே
உலகத் துறுப்பினை ஓர்ந்துழைப் பறிந்தே
உழவெனும் பெருந்தொழில் வளர்த்தே
நிலவுயிர்ப் பொருளின் தீதுநன் றறிந்தே
நிலத்தினுள் நாடெனப் பெற்றே
வலவர், கற்றவர் வாய்ந்தறி வாய்ந்து
வையகங் காத்திட லரசே!

9. மக்கள்.

நாட்டைக் காத்திடும் நல்லர சவையை
நன்மையும் வன்மையுங் கருதிக்
கூட்டிட வல்லார் மக்களுள் கற்றூர்!
கூடார் ஒதுங்கிடல் நன்றே!
ஈட்டமும் நாட்டமும் யாவர்க்கும் பொதுவே!
இல்லறங் காப்பவர் பெண்டிர்!
காட்டிடை விலங்காய் ஆண்பெண் உழைத்தல்
கருக்குலம் அழிவதன் வழியே!

10. ஆடவர், பெண்டிர்.

உடலால் உளத்தால் உரன்பெற் றிருப்போர்
ஒல்வகை முயல்பவர் ஆண்கள்.
திடமொடு நிற்பார்; திறன்வரை செய்து
தீமைகள் விலக்கிநன் றூக்கிக்
கடமையும் ஒழுங்கும் காப்பவர் பெண்டிர்!
காப்பவை போற்றலும் அவரே!
நடுவிதை ஆண்கள்! நன்னிலம் பெண்டிர்!
நானிலங் காக்கவல் லாரே!

11. தாய்மை.

ஓருயிர் இரண்டாய் உயர்தலே தாய்மை!
உயிர்தரும் உயிரே தாய்மை!
ஆருயிர் இணைந்தே அணைத்துடல் உவந்தே
ஆடவர்ப் பேணலுந் தாய்மை!
சீருயிர் அன்பின் சிறப்பிடந் தாய்மை!
சினத்தினைத் தாங்கிடந் தாய்மை!
பேருயர் ஆடவர்ப் பிணிக்குமோ ரன்புப்
பேற்றினைத் தாய்மையென் போமே!

12. பெண்டிர் வாழ்க்கை.

தேடருஞ் செல்வம் ஆடவர் தேடத்
துணையிருந் தவரொடு துய்த்துப்
பீடுயர் அன்பொடும் அறத்தொடும் நெஞ்சைப்
பிணைத்துடல் பிணைத்துயிர் பிணைத்தே
ஈடறும் இன்பத் திருந்துயிர் புரந்தே
இறுதியி லிசைபடப் பிரிதல்
மாடுயர் கற்பின் மங்கையர்க் காகும்
மங்கல வாழ்வெனச் சொல்வாம்!

13. ஆடவர் வாழ்க்கை.

"தன்னைப் போற்றுந் தனியுயிர் மனைவி!
தன்னைப் பேணலும் அவளே!
அன்னை அன்பினள்! அவளின் உரிமையள்!
ஆருயிர்க் குறுதுணை மருந்தே"—
என்னும் நினைவோ டிணைந்தவட் பிணைந்தே
இனிதீந் தல்லவை தாங்கி
மன்னும் அறத்தொடும் மறத்தொடும் அன்பை
மாந்தலும் ஏந்தலும் ஆணே!

14. பொது வாழ்க்கை.

காற்றெடு கலந்த கடிமணம் போலும்,
காரொடு மாமழை போலும்,
ஊற்றெடு கலந்த உறுசுவை போலும்
ஒளியோ டெழுநிறம் போலும்,
கூற்றெடு கலந்த குயின்குரல் போலும்
கூடிய ஆண்பெண் இருவர்
ஏற்றுயர் வொழுங்கோ டுயிர்பலப் புரந்தே
இல்லிருந் துய்வது வாழ்வே!

15. சிறப்பு வாழ்க்கை.

உண்டும் உண்ணக் கொடுத்தும் உயிர்க்கே
ஒருபழி மேவிடா வாழ்ந்தும்,
மண்டும் முயல்வொடு மாவுழைப் பெய்தி
மக்கட் கரும்பணி செய்தும்,
அண்டுந் துன்பிற் கசைவுறு நின்றும்
அரும்பே ரின்பிணைப் பகிர்ந்தும்
தொண்டும் உயிரும் தோன்றிட வாழ்வார்!
தொல்லுல கெங்கணும் வாழ்வார்!

16. ஒழுங்கு.

அவரவர் போக்கி லறிவெனுந் துணையோ
டன்பெனுங் கைக்கோ லூன்றி
தவறுகண் டஞ்சித், தண்ணுள மொன்றத்
தாழ்வுரை உயர்செயல் இயக்கி
எவரெவர் உயிர்க்கும் இன்னு வினையா
திலக்கினை எதிர்கொளுங் கணைபோல்
அவரவர் ஒழுகல் ஒழுங்கெனக் கூறி
அறநூல் சாற்றுதல் கண்டீர்!

17. தூய்மை.

தூய்மையின் தாய்மை வாய்மையே! அதனுள்
தோன்றிடும் பற்பல நினைவும்,
ஆயவை விளக்குநல் அருஞ்சொல் லுரையும்
அதுநின் றெழும்புநல் வினையும்
ஏயுமச் செயலால் இயங்கிடு விளைவும்
இவற்றால் நிறையுமிவ் வுலகும்
வாய்மைக் குறுகள மாகுமிப் பாங்கே
வளியுல கொளிபெறும் வழியே!

18. அறிவு.

துரும்பினைக் கொண்டே தூண்பயன் காண்பார்,
தூண்மிடி துரும்பாய்க் கொள்வார்,
அரும்பினைக் கொய்யா தலர்தலை வேட்பார்,
அலர்ந்தது மதன்பயன் நுகர்வார்,
பெரும்பயன் நோக்கிப் பெறும்பயன் இழவார்,
பெறுவதுட் பெறற்குளம் நிறைவார்,
வரும்பிணி யுள்ளும் வாய்மைகை நெகிழார்,
வல்லறி வாளரென் போமே!

19. அன்பு.

பிறரழத் தாமழும் பேதைமை அன்பு!
'பிறர்'முறை தகர்ந்ததே அன்பு!
உறவினும் பெரிதே! உலகினும் பரப்பே!
உயிர்பகுப் பிறந்ததே அன்பு;அஃ
தறமெனும் நறுஞ்செயற் கருத்தாய்! அறமில்
ஆகாச் செயலுக் கெரிதீ!
மறமெனும் பெருஞ்செயற் குறுதுணை! அதுவே
மண்ணுல கியக்குமா வலியே!

20. கல்வி.

கண்டார் அறிவைக் காண்பது கல்வி!
கற்பதி னிற்பது கல்வி!
அண்டார் அண்டியு மளிப்பது கல்வி!
அளித்திட வளர்வதுங் கல்வி!
உண்டார்க் குவகை ஊட்டுதல் கல்வி!
உய்யார்க் குறுதுணை கல்வி!
கொண்டார் இசைபெற வைப்பது கல்வி!
குனிதொழில் ஒழிப்பது மஃதே!

21. தொழில் முறைகள்.

உண்ணலுக் குதவுநற் றொழில்முதல் தொழிலே!
உடுத்தற் குறுதொழில் இரண்டே!
மண்ணுளே உறையுளை மடுத்தலும் மூன்றே!
மற்றவை துணையவை தமக்கே!
எண்ணரும் பொருளை, ஈந்துமுத் தொழிலும்
இடர்ப்பெறு திருத்தலும் இனிதே!
கண்ணெனு மிவற்றைக் காப்பதே அரசு!
காவாக் காலுயிர் கவல்மே!

22. காப்பு.

கல்லும் இரும்புங் காத்தன ஒருகால்!
காலாள் கரிபரிப் படையும்
வில்லும் வாளும் காத்தன ஒருகால்!
விரிகா னுயரெயில் அகழி
அல்லும் பகலும் காத்தன ஒருகால்!
அவையழிந் தினியெஞ் ஞான்றுஞ்
சொல்லுஞ் செயலுங் காப்பெனக் கொள்ளுஞ்
சிறுநா டுஞ்சிறப் புறுமே!

23. நட்பு.

அன்பொடு கூடிய விருநெஞ் சுறத்தோ
டழுந்துயர் நினைவதும் யாண்டும்
இன்பொடு விளைந்து விளக்குமின் சொல்லும்
இழியா தொழுங்குயர் செயலும்
என்பொடு பிணைந்த இழிவிகழ் வாழ்வும்
இவைபுல் லியவீ ருயிரும்
துன்பினுங் கூடித் துலங்குதல் நட்பே!
தொடர்புண் டதற்கிலை பிரிவே!

24. பகை.

உள்ளப் புகையின் உயிர்நிலைப் பகையே!
உயர்சால் பின்பகை பகையே!
உள்ளப் பகையின் உயர்நிலை அழிவே!
உறுபகை பகைத்திடு மொழுங்கே!
எள்ளப் படுதலு மிழிசேர் பகையே!
இன்சொற் பணிவதன் பகையே!
குள்ளப் பாங்கினுர்க் குறுதுணை யஃதே!
கொள்வார் கொளப்படு வாரே!

25. தீமைக்கஞ்சல்.

நஞ்செனுந் தீமைக் கஞ்சிடான் நலிவான்;
நட்டார்க் கவன்தீங் கிறுப்பான்!
பஞ்செனத் தோன்றிப் படுதுயர் அழுத்தும்!
பருமுட் சேக்கையி னெக்கும்!
எஞ்ஞான் றைக்குந் தீமையில் நன்மை
எட்டுணை யலர்வது மிலதால்
அஞ்சார் அஞ்சுக; அஞ்சுக தீமைக்
கஞ்சுவார்க் கஞ்சுமின் நிலனே!

26. நன்மைக் கயராமை.

அறிவெனுங் கொழுவா லுளப்புல னுழுதே
அன்பெனும் நறுநீர்ப் பாய்ச்சிக்
குறியெனும் உளங்கொள் நல்விதை தேர்ந்து
குறிப்பெனும் பொழுதறிந் தூன்றி,
நெறியெனும் எருவிட் டின்சொலிற் காத்தே,
நெகிழ்வெனும் வளர்களை யகற்றிச்
செறிவுற விளைங்கால் சிறியர்புள் ளோட்டிச்
சிறப்புறல் நறுவிளை வென்பாம்!

27. முன்னறிவு.

புகையினும் பெருநெருப் பாகுமென் றறிக!
புனற்றுளி வெள்ளமென் றுணர்க!
பகையினுக் கடிப்படை சொல்திரி வென்க;
பயன்பெறப் பாடுவித் தென்க;
நகைமுகம் நட்பினுக் கடிநலந் தெளிக!
நறுவினை உயர்திரு உள்க;
திகைவறல் புலமையின் முதற்படி நினைக;
தீயுரை கெடற்கறி குறியே!

28. மெய்யறிவு.

பிறப்பதுங் கனல்பசி பீடித் தழுவதும்,
பில்குபா லொருத்தியூட் டுவதும்,
பறப்பதும் உலகினில் பற்பல துயர்நலம்
படுவதும் பல்வகை யறிவு
சிறப்பதும், சிறக்கத் துறப்பதும், துறக்கச்
சிற்றுயிர் உவப்புற உடலம்
இறப்பதும் ஈங்கிவைக் கைம்பொருள் இருப்பதும்
இறையதும் அறிதல்மெய் யறிவே!

29. உலக இறுதி.

தனிமை மாய்தலுந் தந்நில மகல்தலும் .
தரைவாழ் மக்களொன் றாகி,
குனிமை யொழிதலுங் கோன்மை தவிர்தலும்,
கொள்ளுணர் வொன்றியுள் ளொன்றி
கனிமை நிறைதலுங் கடந்துபல் லுலகுங்
கண்டுபெண் ஆணுமுட் கலந்தே
இனிமை யெய்தலும் இறையுட் காண்டலும்
இவ்வுல கிறுதியென் றுரைப்பாம்!

30. இறைமை.

ஒன்றே யொன்றாய் ஒளிர்ந்துள் விளர்ந்தே
ஒன்றினை ஒன்றாய் உயர்ந்தொவ்
வொன்றே யாகிய, ஒவ்வொன் றுள்ளும்
ஒன்றியுள் உதைத்திடு மொன்றாய்,
ஒன்றே ஒன்றினுள் ஒடுங்கியுள் ஒன்றி
ஒவ்வொன் றழித்து,ஒன் றாகி
ஒன்றாய் நிற்கும்ஃ தொன்றே ஒன்றை
ஓரிறை யென்றுள மொன்றீர்!

வண்ணனை மொழி நூலாரின் பிழைகள்

மொழிப் பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர்.

வண்ணனை மொழிநூலின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று, அனைத்து மொழிகளுமே மனப்போக்காக அமைத்துக் கொள்ளப் பட்டவை என்பதாகும். தமிழால் இது பொய்த்துப் போகின்றது. எவ் வாறெனில், உலகத்தில் முதன் முதலாய்ப் பண்பட்டுச் செப்பமெய்திய மொழியாகிய தமிழில் மனப் போக்காக அமைந்த ஒரு சொல்தானும் இல்லை. இப்பொழுது முயன்றாலும் தமிழின் பிறப்பு இப்படித்தான் என்று கண்டுகொள்ளமுடியும். தமிழிலக்கண ஆசிரியர்கள் மிகப் பழங் காலத்திலேயே தமிழை ஒரு நிலைப்படுத்தி விட்டனர். அதினின்று சிறி தேனும் வழு ஏற்படுதலையும் அவர்கள் ஒப்புக்கொண்டாரிலர். இந்தக் கொள்கையைக் கண்டிப்பாகவும் நெகிழ்ச்சியின்றியும் கடைப்பிடித்த காரணத்தால் தான், தமிழ் ஓரளவுக்கேனும் தன் முந்தியன்மை மாறா மல் இருந்து வருகின்றது. மற்றமொழிகளில் இவ்வித வரையறை இன் மையால் அம்மொழிச் சொற்கள் காலத்தால் சிதைவுண்டு அடையாளம் தெரியாமல் மாறிவிட்டன. அவற்றின் பொருளும் காலத்துக்குக் காலம் மாறுபடவே, அவற்றின் முதற் பொருள் தள்ளப்பட்டோ மறக்கடிக்கப் பட்டோ போய்விட்டன.

கிலீசன் என்பவர் கூறுவது:- "ஒரு மொழியின் சொல் தொகுதி தோன்றுவதும் மறைவதுமாயிருக்கின்றது. மொழியை உருவாக்கும் மூன்று உட்கூறுபாடுகளுள் மிக நிலையற்றது சொற்றொகுதியே. மொழியின் சிறப்புத் தன்மையோடு ஒட்டி வராததும் அதுவே. அடிக் கடி மாறிக்கொண்டுவரும் சொற்றொகுதியின் ஒருபகுதியைப் பொது வாக உலக வழக்கு(Slang)என அழைக்கின்றனர். ஆயினும் சிறந்த, உயர்ந்த சொற்கள் தாமும் அடிக்கடி உருவாக்கப் பட்டும், சிறிதுபயன்பட்டுப் பின்பு வழக்கிறந்தும் வருகின்றன. இலக்கியத்தில் மட்டுமே அவற்றைக் காண முடியும். சிலவகைச் சொற்கள் பிறவற்றி னும் எளிதில் மறையுந் தன்மை வாய்ந்தனவாக இருப்பினும் என்றும் நிலைபேறுள்ள சொற்கள் என்று எவற்றையும் கூறமுடியாது. மிகவும் பழக்கமானதும், நன்கு பயில்வதுமான, நிலைபேறுளவை என்று கருதப்படும் சொற்கள் தாமும் அழிந்துபடத்தான் செய்கின்றன. ஆயி

ரம் ஆண்டுகளில் 20 விழுக்காடு அழிகின்றன என்று கூறலாம். மேலும் பொதுவான ஒரு மொழி பேசும் இனத்திலிருப்பதைவிட, ஒரு தனிமாந்தனின் வாழ்வில் சொற்கள் பிறப்பதும் அழிவதும் அடிக்கடி நேர்கின்றன. ஒவ்வொரு மாந்தனும் பொதுவாக ஒவ்வொரு நாளும் மூன்று புதிய சொற்களைக் கற்றுக்கொள்ளுகின்றான். பழைய சொற்களையும் மறந்துகொண்டு வருகின்றான். கற்பதைவிடச் சற்று மெல்லவே மறப்பானாயினும், மறப்பது உண்மையே! இந்தக் கணக்கும் மிகக் குறைந்த அளவையே காட்டுகின்றது என்று கூற வேண்டும்.''

தமிழைப் பொறுத்தவரை இக்கூற்று சரியன்று. பிறமொழி களுக்கு ஓரளவு பொருந்துமாயினும், அங்கும் இது மிகையுரை என்று தான் கூறவேண்டும்.

ஒரு மொழியின் அனைத்துச் சொற்களையும் அம்மொழியாளனைப் போற் பிறமொழியாளனும் பிழையின்றிப்பலுக்க முடியும் என்று கருது வது ஒரு மயக்கமே. வாழ்நாள் முழுவதும் பயின்றாலும் அனைவராலும் இத்தகைய திறமையைப் பெறுதல் முடியாத செயலாகும். ஏனெனில் அந்தந்த நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கும் உணவுப் பழக்கங்கட்கும் ஏற்ப அவ்வந்நாட்டு மக்களின் குரல் உறுப்புகள் நுண்ணிய வேறு பாடுகளடைந்திருக்கின்றன. ஒருமுறை, அண்ணமலைநகருக்குச் செல்ல விரும்பிய ஓர் அமெரிக்கருக்கு ஆனைமலைச் சாலைக்குரிய பயணச்சீட்டுக் கொடுக்கப்பட்டு விட்டதாம்! அவர்தம் பிழையான பலுக்கலே இதற்குக் காரணம்.

ஒரு மொழியாளரைப் போல் அம்மொழியைப் பிழையின்றிப் பலுக்க வேண்டுமென்றால், அந்நாட்டிலேயே குடியேறி அந்நாட்டு மக்களாகவே மாறி விட்டவர்களின் வழிவந்தவர்களுக்கு மட்டுமே அஃதியலும். தலைமுறை பிந்தப்பிந்த மொழியாட்சியும் சிறக்கும்.

தமிழ் மிக வளர்ச்சி எய்தியிருப்பதாலும், உயர்ந்த தரத்தில் நிலைப்படுத்தப் பெற்றுள்ளமையாலும், மொழிகட்குள் ஒரு தனித் தன்மை பெறுகின்றது. தமிழகத்தின் கல்லா மாக்களிடைக் கொச்சைச் சொற்களோ இழிவழக்குகளோ நிலவிவருதல் கூடும். ஆயினும் அவை தமிழிலக்கணத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டவை அல்ல. இக்கொள்கை

தொடக்கத்திலிருந்தே கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. ஆயினும் இப்பொழுது தமிழகப் பல்கலைக் கழகங்களில் வண்ணனை மொழிநூல் ஒருபாடமாகப் புகுத்தப்பட்டுள்ளமையால் தமிழின் தரம் தாழ்த்தப்படுகின்றது. கொச்சைமொழியும் பிறமொழிக் கலப்பும் சரியே என்று ஊக்குவிக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே, இந்தியப்பல் கலைக் கழகங்கள் பலவற்றிலும் மொழித்துறைகளில் தமிழுக்குரிய இடத்தை, இரண்டக மனப்பான்மையுடைய அரை வேக்காட்டுப் பேராசிரியர்கள் அடைத்துக் கொண்டுள்ளனர். எவ்வாறு முறைமன்றங் கள் பொதுமக்களின் இழிந்த ஒழுக்கங்களைச் சரி என்று ஒப்புக்கொள்வ தில்லையோ, அவ்வாறே அப்பொதுமக்களின் இழிந்த பேச்சுவழக்கு களும் மொழிநூலாளரால் ஒப்புக்கொள்ளப்படல் கூடாது.

மேலைநாட்டுப் பேச்சுவழக்கியலாளர்களின் ஆராய்ச்சி நகைக்கத் தக்க அளவு கோமாளித்தனமாயிருக்கின்றது. ஆளுக்கு ஆள் பேச்சு வழக்கு மாறுபடுவதாக அவர்கள் பிரித்துக் காண்கின்றனர்! எருதந் துறை அகரமுதலி தானும் இதனை ஒப்புக்கொண்டுள்ளது. பேச்சு வழக்குமொழி என்பதற்கு அது தரும் பொருள்:

“ஒரு மாவட்டம், ஒரு வகுப்பு அல்லது ஒரு தனி ஆளுக்குரிய பேச்சு வடிவம்” என்பதாகும்.

ஒரு தனிமாந்தனின் சொல்லாட்சியோ, பலுக்கலோ, பேச்சுமரபு களோ ஒரு பேச்சு வழக்குமொழியை அமைப்பதற்குப் போதுமானவை அல்ல

வண்ணனை மொழிநூல் விரிவுரையாளர்கட்கு ஒருவகையான வெறிபிடித்திருக்கின்றது என்னலாம். அஃதாவது, ஒவ்வொரு மொழிக் கும், மொழிக்குடும்பத்திற்கும் அடிப்படையான ஒரு முதல் உரு (prototype) இருந்தே ஆகவேண்டும் என்று கருதி அதனைக் காணத் துடிக்கின்றனர். ஒரே மொழிக்குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனி ஒவ்வொரு முதல் உருவைத் தேடுவது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒவ்வொரு தாயைத் தேடுவது போன்றதாகும். ஒருமொழிக் குடும்பத் தைச் சார்ந்த வழக்கு மொழிகள் அனைத்தையும் ஒன்றோடொன்று ஒப் பிட்டு அவற்றின் பொதுத்தன்மையிலிருந்து அம்மொழிக் குடும்பத்

தைத் தோற்றுவித்ததாகக் கருதப்படும் ஓர் அடிப்படை மொழியின் தன் மையை உருவாக்கிக் காண முயற்சி நடக்கின்றது. இஃது எப்படி இருக் கின்றதென்றால், ஒரு குடும்பத்திலுள்ள எல்லாக் குழந்தைகளின் முகத் தோற்றத்தையும் ஒப்பிட்டு, அவற்றிலிருந்து ஒரு பொதுவான முகத் தோற்றத்தை உருவாக்கி, அதிலிருந்து அப்பிள்ளைகளின் தாய் இப் படித்தான் இருக்கவேண்டும் என்று முடிவு கட்டுவது போலாகும்.

வரலாற்றைத் துணைக் கொள்ளாமையே இந்த மயக்கங்கட்கெல் லாம் காரணம். வரலாற்று முறையையோ, வழிமரபு முறையையோ பின்பற்றினால், ''முதல் உரு''வம் பற்றிய சிக்கலே எழ வழியில்லை.

உண்மையான வரலாற்று ஆய்வுக்கு மிகுந்த பொறுமையும் மிகுந்த நேர்மை உணர்வும் இன்றியமையாதன. உலக வர லாறு, தெற்கிலிருந்து, அதாவது தமிழகத்திலிருந்து தொடங்கப் படல் வேண்டும். மேலைநாட்டு மொழி ஆராய்ச்சியாளர்கள் இந்திய- ஐரோப்பிய மொழித் தொகுதியின் தலைப்பகுதியான தமிழைப் பற்றிக் கொள்ளாமல் அதன் வாற்பகுதியான சமற்கிருதத்தைப் பற்றிக் கொண்டு அதிலேயே தங்கள் ஆராய்ச்சி முழுவதையும் செலவிடுவதா லேயே குன்றுமுட்டிய குருவிபோல் இடர்ப்பட்டுப் பொருந்தா முடிவு கட்கு வருகின்றனர். நாற்பதாண்டுகள் பாலைவனத்தில் அலைந்து திரிந் தாலுங்கூட, இசரவேல் மக்கள் இறுதியில் சரியான வழியைக் கண்ட னர். ஆனால் சமற்கிருதப் பாலைவனத்தில் அலைந்து திரியும் நம் மேலை நாட்டு மொழி வல்லுநர்களோ நாற்பது ஊழிக்காலங்கள் அலைந்து திரிந்தாலும் உண்மையான வழியைக் காணப்போவதில்லை. பிற்போக் காளர்கட்கு இது நல்லதாகப் போயிற்று. வரலாற்றுமுறை மொழியா ராய்ச்சியின் மூலம் உலகம் அறிவு பெற்றுத்திகழ்வது அவர்கட்குக் கசப்பானதாகவிருக்கின்றது. எனவேதான் சமற்கிருத வாணர்கள் வண் ணனை மொழிநூலை மிக ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு இந்தியா முழுவதும் அதனை மிக ஊக்கத்துடன் பரப்புகின்றனர்.

இவ்வண்ணனை மொழிநூலாளர்கள் கருத்தின்படி வரலாற்று முறை மொழி ஆய்வு என்பது, ஒருமொழியின் அவ்வக்கால இலக்கியத் தில் சொற்களும் அவற்றின் பொருட்களும் பயின்றுவரும் முறையிலி ருந்து அவற்றின் காலத்தைத் தெரிந்துகொள்வதாகும். அண்மையில் தோன்றிய புதிய மொழியாயின் அதற்கு இவ்வாராய்ச்சி பொருந்தக் கூடும். ஆனால் பழம் பெரும் மொழியான தமிழிலோ பழங்கால

இலக்கியங்கள் அழிந்துபோயின. சொற்களும் பொருளும் இடத்துக்கும் தேவைக்கும் ஏற்பப் பயன் படுத்தப் பெறுகின்றன; அவற்றின் காலமுறைப்படி அல்ல. எனவே தமிழ்ச் சொற்களின் உண்மை வரலாற்றை இம்முறை உணர்த்தாது. எடுத்துக்காட்டாக, "பள்ளி" என்ற சொல்லைக் கொள்வோம். இச்சொல்லுக்கு ஏறத்தாழ இருபது பொருட்கள் உள. இன்று தமிழில் இருக்கும் நூல்களில் மிகமுந்தியதான தொல்காப்பியத்தில் இச்சொல் 'இடம்' என்ற பொருளிலேயே வந்துள்ளது. இப்பொருள் அச்சொல்லின் மிகப் பிந்திய பொருளாகும். தொல்காப்பியத்துக்கு முந்திய பழந்தமிழ் நூற்களெல்லாம் அழிந்து போனமையால் இதுபோன்ற சொற்கள் எவ்வெக்காலத்தில் எவ்வெப் பொருளில் வழங்கி வந்தன என்பதை அறிதல் இயலாததாகும். வண்ணனை மொழிநூலாளர்கள் செய்திருக்கும் நன்மையெல்லாம் ஒன்றுதான். ஒலியியலைப் பல நுண்ணிய பிரிவுகளாகப் பாகுபடுத்தி அவற்றுக்குப் பொருத்தமான பெயர்களையும் வழங்கி ஒழுங்கு படுத்தியிருக்கின்றனர். இதனைத்தவிர, அவ்வண்ணனை மொழிநூலில் ஒன்றுமேயில்லை.

வண்ணனை மொழிநூல் என்ற பெயரே அவர்கள் வரலாற்றுணர்வு அற்றவர்கள் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடுகின்றது. மொழிநூலுக்கு வரலாற்று அறிவே தலையாக வேண்டப்படுவதாம். வண்ணனைப் பகுதி இலக்கண நூற்கட்கே உரியதாம்.

(பாவாணர் எழுதிய 'உலகின் முதற் செம்மொழி' எனும் ஆங்கில நூலின் ஒரு பகுதி பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா)

அறிவிப்பு !

கடந்த இரு கிழமைகளுக்குமேல் தொடர்ந்து பெருமழை பெய்தமையாலும், பெண்ணையாற்று வெள்ளம் பெருகி நமது அச்சக, அலுவலகங்களில் வேலைசெய்ய இயலாமல் இடர்ப்பாடாய் இருந்தமையாலும் நமது இதழ் வேலைகள் தடைப்பட்டு விட்டன. ஆதலின் இம்மாதத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் குறித்த காலத்தில் வராது போக நேர்ந்து விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

—அமைச்சர்.

மக்களவை

தமிழ் நலம் காக்கப்படுமா?

ஐயா,

சில நாட்கள் முன் தங்கள் "தென்மொழி" சில படித்தேன். தங்கள் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தன்னலக் கலப்பற்றவை. தாம், தம் மனைவிமக்கள், தம்காமக்கிழத்தியர், தாம் வளர்க்கும் நாய்கள் முதலியவற்றின் நலமொன்றே குறிக்கோளாய், தமிழ் என்றும் தமிழ்நாடு என்றும் புறப்போர்வை விரித்து, ஏழைப் பேதைத்தமிழர்களை ஏமாற்றும் பன்றித்தலைவர்கள் தமிழர் செய்த தீப்பேற்றால் தமிழகத்தில் மலிந்துவரும் இக்காலத்தில், தமிழ்மக்கள் நலமொன்றே பேணும் நன்னோக்குடைய தங்களைப் போன்ற ஒருசிலரைக் காண்பது அரிது. ஆனால் நல்லோராகிய தங்கள் ஆர்வமும் முயற்சியும், தமிழ் மக்களுக்கு நலம் பயப்பனவாக அமையாது; விழலுக்கிறை நீராக வீணாம் எனக் கருதித், தமிழகத்தின் தலை எழுத்தைத்தான் நொந்துகொள்ள வேண்டியதாகின்றது.

பழந்தமிழ் மானத்தை உயிர்ப்பிக்கக் கன்னடர் ஒருவர் தலைவராகத் தோன்றினார். அவர் 'சுயமரியாதை'யில் தொடங்கி, 'குடியரசி'ல் நின்று 'நீதி'யில் நடந்து, இப்போது பணக்குவையைக் காத்துக் கொண்டிருக்கிறார்.

அவரிடம் பயின்ற 'சிட்டர்'கள் பார்ப்பனக்குலத்தை வேரறுக்கும் மறவாள் ஏந்தி, நாடெங்கும் வலம் வந்து, இப்போது அப் பார்ப்பனத் தலைவனின் அடிவருடி, அவன் ஏவல் கேட்கும் இழிநிலை எய்தி நிற்கின்றனர். எல்லைகாக்கும் மறத் தமிழரசும் இப்போது இச்சிறுமதியினருடன் கைகோத்து உறவாடுகின்றது.

தமிழகத்தில் பார்ப்பனத் தலைமையை வீழ்த்தித் தமிழ் மக்களை வாழ்விக்கத் தோன்றிய இயக்கத்தினரும் தலைவர்களும் இவ்வாறு, அப் பார்ப்பனரே எள்ளிச் சிரிக்கும் வகையில் மண்ணைக் கவ்வி விட்டனர்.

கல்வி, கைத்தொழில், இயந்திரத்தொழில், செல்வம், முதலிய அனைத் துத்துறைகளிலும் பார்ப்பனர் முன்னையினும் முன்னேறி வருகின்றனர். தமிழரோ கானலை நீரெனக்கருதிச் செல்லும் மான் கூட்டம்போல், போலித்தலைவர்கள் போலிக் கட்சிகளை நம்பிக் கீழ்நிலை யுறுகின்றனர். ஆக்கமற்ற போலிக் கொள்கைகளில் ஊக்கம் காட்டி மாய்கின்றனர்; ஒய்கின்றனர்.

தங்கள் போக்கிலும், தமிழர்க்கு நலம்பயவாத் தவறுகள் என நான் கருதும் சில பின்வருமாறு:—

1. தங்கள் மொழிக் கொள்கை

ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக ஏற்கிறீர்கள். ஏன்? பிறநாட்டுக்கலை கல்வி, அரசியல், வாணிகம் முதலியவற்றில் தமிழனும் பங்குகொள்வதற்கு அவனுக்கு ஆங்கிலஅறிவு வேண்டும்! கழகக் காலத்திலும் வாணிகம் அரசியல் காரணமாகத் தாம் தொடர்பு கொண்டிருந்த பிற நாட்டு மொழிகளைத் தமிழன் அறிந்திருந்தான். இன்று இந்தியாவின் நாட்டுமொழி இந்தி, அதனை வடபாலுள்ள எல்லா மாநிலங்களும், தென்பால் தமிழகம் ஒன்று நீங்கலாகவுள்ள கன்னடம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் மாணவர்களும் கட்டாயப் பாடமாக ஏற்று, அரசியல் அலுவல்களுக்குத் தகுதி பெறும்போது, தமிழகத்து மாணவர்கள் மட்டும் அத்தகுதியை இழந்து நிற்கவேண்டுமா? தமிழகத்திலும் சென்னை போன்ற நகர்களில், கல்வியே கருவியாகக்கொண்டு வழிவழியாகப் பிழைத்துவரும் உயர்குலக் குடும்பங்கள் இந்தி பயின்று பயனடைகின்றன. தமிழகத்துச் சிற்றூர்களிலுமுள்ள பிற்போக்கு இனத்தவரைச் சேர்ந்த இளைஞர்களை இந்தி பயிலவிடாது தடுத்து, அவர்கள் வாழ்க்கை வாய்ப்பைக் குலைப்பானேன்?

இந்தி நாட்டு மொழி என்னும் நிலை மாற்றப்பட்டாலன்றி; தமிழகத்து இளைஞர் மட்டும் இந்தி படிக்கக் கூடாதென்று தடுப்பது அன்னார்க்கு இழைக்கப்படும் பெருந் தீங்கு.

2. தனித்தமிழ்நாடு

அஞ்சல், பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு போன்ற துறைகள் மைய அரசிலும், பிறதுறைகள் மாநில அரசிலும் இருக்கும் படியான அரசியல் அமைப்பு ஒன்றே இக்கால வரலாற்றுச் சூழ்நிலை

யில், இந்திய நாட்டில் எல்லா மாநிலங்களுக்கும் ஏற்றது. உணவுத் துறை கூட மைய அரசின் பொறுப்பில் இருக்கவேண்டியநிலை இன்று உருவாகியுள்ளது!

தமிழ் மக்கள் வாழ்வுக்கு வேண்டுவனவாக நான் கருதுபவை:–

1. மக்களின் பண்பைக்குலைக்கும் திரைக்கலையும், மஞ்சள் தாளிகைகள் முதலியனவும் சுவடின்றி ஒழிக்கப்படல் வேண்டும்.

2. பதவிப்பித்தேறித் திரியும் கட்சிகள், தலைவர்கள் மறைய வேண்டும்.

3. தமிழகத்தின் உணவுப் பெருக்கத்துக்கும், பல்வகைச்சிறுதொழில் பெருந்தொழில் ஆலைகள் அமைப்புக்கும் வழி வகுக்கப்படல் வேண்டும்.

4. சமயத்தின் பேரால் மலிந்துள்ள எண்ணற்ற மூட நம்பிக்கைகளும் பழக்கங்களும் கல்லி எறியப்படவேண்டும்.

5. தமிழகத்து உயர்கல்விக் கூடங்களில் பலநாட்டுக் கலைகளும், மொழிகளும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

6. வாழ்க்கையில் எளிமையும், சிந்தனையில் உயர்வும், செயலில் ஆற்றலும் கொண்ட புதிய தமிழினத்தை உருவாக்க வேண்டும்.

இந் நெறியில் தமிழகத்தை இட்டுச்செல்ல ஒரு தலைவனும் கட்சியும் தோன்றுமா ?

"ஒரு தமிழன்"

(ஆசிரியர் குறிப்பு: இம்மடலை எழுதியவர் தம் பெயரைக் குறிப்பிட்டிலர். மடல் திருநெல்வேலியிலிருந்து எழுதப் பெற்றுள்ளது. ஓரிரு வடசொற்களை மாற்றியதன்றி மடலைக் கூட்டாது குறைக்காது அப்படியே வெளியிட்டுள்ளோம். இத்தகைய கேள்விகளுக்குத் தென்மொழி ஏற்கனவே பன்முறை விடைகூறியிருப்பினும், இன்றும் இம்மடலுக்கு விளக்க வுரையாக அன்பர்கள் கட்டுரைகள் எழுதலாம். சில பயனுள்ள கட்டுரைகளை வெளியிட்ட பின் தென்மொழி தன்விளக்கத்தைப் பின்னர் கூறும். இவ்வகையில் ஐயப்பாடு கொண்டவர்கள் அவ்வுரைகளைத் தவறாது படித்துப் பயன் பெறுவார்களாக. –ஆ. ா.)

இலக்கியம்

இயற்கை யாற்றுப்படை

ம. இலெ. தங்கப்பா.

முன்னுரை

இந்நாட்டில் இற்றைநாள் அளிக்கப்படும் கல்வி மடமையும் குருட்டுத்தனமும் வறட்சியும் வாய்ந்ததாகவிருக்கின்றது. வாழ்க்கையின் உண்மைப் பொருளையும் சிறப்பையும் இளைஞர்க்கு அறிவுறுத்துவதாயிராமல் புறவாழ்க்கை நலன்களை அடைந்து துய்ப்பதற்குப் பயன்படும் ஒரு கருவியாகவே இருந்து வருகின்றது. புறவாழ்க்கைக் குரிய அறிவே மிகவும் சிறந்ததாகப் போற்றப்பட்டும் வருகின்றது. அக வாழ்க்கை ஒன்றிருக்கின்றது என்பதையோ, அவ்வக வாழ்க்கையைக் கருவாகக்கொண்டு அதற்குச் சார்பாக அமைவதே புறவாழ்க்கை என்பதையோ இன்றைய கல்விமுறையிற் பயின்ற எந்த இளைஞனும் தெரிந்துகொள்ள வாய்ப்பே இல்லை. நம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்கும் மாணவர்கள் வறட்டுத்தனமான தங்கள் பாடத்திட்டத்தை விட்டு அப்புறம் இப்புறம் தங்கள் அறிவையோ, உணர்வையோ திருப்ப முடியாதவராய் அப்பாடத் திட்டத்தாலே மண்டையில் அடிபட்டுக் கிடக்கின்றனர் உண்மைக் கல்வியின் உயிர்ப்பையோ, தன்மை செழுமை கொழுமையினையோ அறியாதவராய்க் காய்ந்து வறண்ட பாட நூற்களையே கட்டிக்கொண்டு அழுகின்றனர். தம்மைச் சுற்றிலும் அழகொழுகப் பரந்து கிடக்கும் இயற்கையின் வாயிலாகப் பெறத்தகும் மேலான, ஏட்டுக்கல்வியினும் பன்மடங்குயர்ந்த அறிவும் உணர்வும் அவர்கள் கருத்துக்கோ நெஞ்சுக்கோ எட்டாதனவாயிருக்கின்றன. இயற்கை அழகைக் கண்டு மகிழும் எளிய அறிவுதானும் அவர்கட்கில்லை.

மேலை நாடுகளில் தொடக்கப் பள்ளியிற் பயிலும் சிறுவர்தாமும் இயற்கை அறிவும் சுவைபுணர்வும் வாய்ந்தவராயிருக்கின்றனர். மாறி

வரும் பருவங்களின் அழகிலும் அவ்வப்பருவத்தே நிகழும் பல்வேறு இயற்கை நிகழ்ச்சிகளிலும், அவர்கள் நன்கு ஈடுபடுகின்றனர்.

தம்மைச் சுற்றியுள்ள பல்வகைச் செடி கொடிகள் மலர்கள் ஆகியவற்றின் வாழ்க்கை வரலாறுகளை அவர்கள் அறிவர். காடுகளில் வதியும் பறவைகள் பூச்சிகளின் பெயர்களையும் அவற்றின் இயக்கங்கள் பழக்க வழக்கங்களையும் அவர்கள் ஏடுகள் வாயிலாகவும் கூர்ந்து நோக்கும் பழக்கத்தாலும் நன்கு தெரிந்து கொள்கின்றனர். இயற்கை ஈடுபாடு அவர்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து போன ஒன்றுயிருக்கின்றது. சிரிக்கும் மலர்களும், பாடும் பறவைகளும், அழகிய வண்ணப் பூச்சிகளும் ஊர்ந்து செல்லும் நத்தைகளும் அவர்களின் கவனத்தை ஈர்க்கத் தவறுவதில்லை, நம் இளைஞர்களிடமோ இயற்கை ஈடுபாடு என்பதை மருந்துக்கும் தேடமுடியாது. இவர்கட்கு எதிலுமே அக்கறையில்லை, மிகமிகப் பழகிய மரஞ்செடி கொடிகள் புட்கள் பூச்சிகளைத் தவிர வேறெவற்றின் பெயர்களும் அவர்கட்குத் தெரியாது. புதிதாக நம் நாட்டுக்கு வரும் வெளி நாட்டார் ஒருவர் நம் சோலைகளில் ஒரு பறவையைக்கண்டு அஃது என்ன பறவை என்று கேட்டால் பெயர் சொல்லத் தெரியாத அளவுக்குத்தான் நம் இயற்கை அறிவிருக்கின்றது. நாம் அதற்காக வெட்கப்படுவதுமில்லை. இயற்கையிலேயே தோன்றி இயற்கையிலேயே மீண்டும் கலந்துபோக இருக்கும் நமக்கு இயற்கையின் பெருமையை உணர்ந்து போற்றும் எண்ணம், இயற்கை வழங்கும் செய்தியைப் புரிந்துகொள்ளும் நாட்டம் இல்லாதிருப்பது எத்துணை இரங்கற்குரியது.

ஒரு தாயின் பாலருந்தி அவள் மடிமீது வளரும் ஒரு மகவு. தாயின் மார்பிற் பாலினை அருந்துவதோடு மட்டும் அமைந்து விடுவதில்லை. அவளை அணைத்தும், தழுவியும், முத்தியும் அவள் மடியிற் புரண்டும் ஒருநொடி அவளில்லாவிடில் நைந்து கதறியும், அவளைக் காணும் பொழுதெல்லாம் தன் உடல் பொடிப்ப, உள்ளங்குளிர, உயிர் உவக்க அன்பூற்று நெஞ்சில் திறக்கப்பட்டு எவ்வாறெல்லாம் கழிபேரின்பம் அடைகின்றது! இத்தகைய வாழ்க்கை அக்குழவிக்கிருப்பதனுல்தான் அது பல்லாற்றுனும் நல்லியல்பும் சிறப்பும் நிரம்பிச் செப்பமாக வளர்கின்றது. இக்காலக் கருவி நாகரிகக் கோளாறு காரணமாகத் தாயிடத்தே பாலைமட்டும் அருந்தி, அவள்பால் வேறெவ்வகை நெருக்கமோ ஈடுபாடோ கொள்வதற்கு வாய்ப்புப்பெறுமல் வளரும் ஒரு குழவி எவ்வாறு மனநிறைவமைதியும் உணர்வுச் செப்பமும் பெறுமல் பிறழ வளர்கின்றது என்பதை நாம் அறிவோம். இயற்கை தரும் பருப்பொருட் பயன்களை மட்டும் நாம் நுகர்ந்துகொண்டு, அதன்பால் வேறெந்த ஈடுபாடும் கொள்ளாமல் இருப்பது மேற்கூறிய குழவியின் நிரம்பா வளர்ச்சியைப் போன்றதேயாகும்.

இறை உயிராகவும் இயற்கை உடலாகவும் விளங்குகின்றதென்பர் இயற்கையில் தோய்ந்த மெய்யுணர்வாளர். இயற்கை உடலை ஊட்டி வளர்ப்பதோடமையாமல் உள்ளத்தையும் ஊட்டி வளர்க்கின்றது. இயற்கையில் தோயும் உள்ளமோ தண்மையும் மென்மையும் பசுமையும் வாய்ந்து தழைத்துச் செழித்தோங்குகின்றது. இயற்கையில் தோயாத நெஞ்சங்களோ பசையற்றுக் காய்ந்து வறண்ட பாலை நிலங்களாகக் காட்சியளிக்கின்றன. அழகுணர்வையும் கூர்ந்துநோக்கும் திறனையும், கலையுணர்வையும், கற்பனை ஆற்றலையும் எண்ணத் தெளிவினையும், உயிர்க்குலம் அனைத்தின் மேலும் பற்றிப் படரும் இயற்கைப் பண்பினையும் இயற்கை நமக்கு அளிக்கவல்லது. ஒருவன் இயற்கையில் தோயும்பொழுதுதான் அவன் கண்கள் திறக்கின்றன. இப்புடவியின் அழகையும் ஒழுங்கையும் கண்டு அவன் வியக்கின்றான். அவ்வொழுங்கின் ஒரு கூறுபாடான தன் வாழ்க்கையின் விழுமத்தை உணர்கின்றான். தான் காணும் ஒவ்வொன்றும் இயற்கையின் பகுதியாயிருந்து இன்பத்தை எழுப்புதலை உணர்கின்றான். அப்பொழுதுதான் வாழ்க்கை அவனுக்குச் சுவையுடையதாகின்றது. ஒவ்வொரு பொருளுக்கும் உயிருக்கும் இயற்கையில் அமைந்த இடத்தினையும் அவற்றின் ஒழுங்கமைதியையும் காணும் அவனுக்கு அவ்வொழுங்கமைதி சிதைக்கப்படுவதால் ஏற்படும் அழகின்மை தாறுமாறு மிகுந்த வருத்தத்தை உண்டாக்குகின்றது. அச்சிதைவை மீண்டும் சரிப்படுத்த அவன் முனைவதோடு, தான் எந்தநிலையிலும் அதுபோன்ற சிதைவுகட்குக் காரணமாதல் கூடாது என்று அவன் நினைக்கின்றான். அழகுணர்வோடு அருளுணர்வும் அவன் உள்ளத்தில் முகிழ்க்கின்றது. இவ்வாறு உள்ளத்தை உயர்த்திச்செல்லும் ஆற்றல் இயற்கைக் கிருப்பதால்தான். அரும்பெரும் புலவர்கள், அருட்பெருஞ் சான்றோர்களின் வாழ்க்கையை நோக்குங்கால் அடிப்படையில் இயற்கைத்தோய்வு உள்ளோடிக் கனிந்திருத்தலைக் காண்கின்றோம். கழகப் பெரும் புலவர்தம் பாடல்களைப் பயில்தொறும் பயில்தொறும் அவர்கள் எத்துணைப் பேரளவில் இயற்கையில் செஞ்சைச் செலுத்தி அதன் நுண்ணிய காட்சிகளில் எங்ஙனம் ஒன்றி மகிழ்ந்திருக்கின்றனர் என்பதைக் காணலாம். ஓட்சுவொர்த்து, செல்லி, கீட்சு, பாரதிதாசன் போன்ற புலவர்கள் இயற்கையில் மூழ்கித் திளைத்தமையாலன்றோ அவர்தம் பாடல்கள் நவில்தொறும் நவில்தொறும் நமக்குக் கழிபேரின்பம் ஊட்டாநிற்கின்றன.

இற்றைத் தமிழகத்தில் புற்றீசல்கள்போல நாளுக்கொரு புலவர்(?) வேளைக்கொரு பாவலர்(?) என்று புறப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இத்தகையோர் பலர் கூடிக்கொண்டு தாம் நினைத்ததையெல்லாம் பாட்டென்று கிறுக்கியும், கிறுக்கியதையெல்லாம் அச்சேற்றி நூற்களென்று கூறிக்கொண்டும், தமக்குள் மாநாடுகள் கூட்டித் தமக்கெட்டாதன எல்லாம் பற்றி முட்டாள்தனமாக அரற்றிப் பிதற்றிக்கொண்டும் தம் புகழ்த் தினவினைத் தீர்த்துக்கொள்கின்றனர். இவ்வாறு

இன்று பாராட்டும், விளம்பரமும் பெற்று! மக்கள்முன் கோமாளித்தன மான பெயர்களை நீட்டிக்கொண்டு நிற்பவர்களுள் ஒருவர்தாமும் உண்மைப் புலமையின் பெருமிதத்தைத் தொடுபவராகக்கூட இல்லை. இவர்கள் எழுதிக்குவிப்பன எல்லாம் நல்ல பாட்டின் மிகக் குறைந்த இலக்கணத்தைத் தானும்பெருத வெறுஞ் சொற்குப்பைகளே! இவ்வாறு திரைப்பட விரும்பிகள் நடுவிலும் அரசியல் ஆர்ப்பாட்ட மேடைகளி லும் போலித் தமிழ்ப் புல்லுருவிக் கூட்டங்களிடையேயும் நூல் வாணிகக் கயவர்தம் கண்களிலும் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவராகி இன்று 'பாரதிதாசனுக்குப் பின் நானே' என்று வாயடியடித்துக் கொண்டு வரும் அரைவேக்காடு கால்வேக்காடுகளில் ஒன்றுதானும் உண்மைப் பாவன்மையை எட்டிப்பிடிக்க வியலாமைக்கு முதற்காரணம், இவற்றின்பால் இயற்கை ஈடுபாடு இல்லாமையே! பாட்டுணர்வு இளமையில் முகிழ்ப்பதே இயற்கையாலேயாம். சுற்றியிருக்கும் அழகில் வியந்து ஈடுபட்ட உள்ளம்; தான்பெற்ற அவ்வின்பம் பொங்கி வழியவே அதனைப் பிறருக்கும் உணர்த்தத் துடிக்கிறது. அத்துடிப்பில் எழுவதே பாடல். பின்பு இயற்கையில் மேன்மேலும் தோய்ந்து அழகை மட்டுமல்லாது அமைதியையும், ஒழுங்கையும் அறிவையும் இயற்கையிற் கண்டு கண்டு அவற்றின் இறும்பூதால் விரிவெய்திய நெஞ்ச உணர்வைப் பாடலாக வடிப்பதும் அவ்வாறு இயற்கையில் புகுந்த நெஞ்சம் மாந்த வாழ்க்கையிலும் புகுந்து இயற்கைக் கண்ணோட்டத்தோடு அதனை நோக்கி, இயற்கை ஒழுங்கை அங்குக் காண விழைவதும், அவ்வொழுங்கில்லாவிடத்து வருந்துவதும், அவ்வொழுங்கை நிலைநாட்டப் பாடுபடுவதுமாய நிலைகளிலெல்லாம் உணர்வும் எண்ணமும் கனிந்து பாட்டாக முகிழ்ப்பதும் இயற்கை ஈடுபாட்டின் தொடர்ச்சியாகப் பின்னர் ஏற்படுவதாகும். இயற்கையில் படிந்த நெஞ்சே படைப்பின் விரிவினையும் பெருமிதத்தையும் மாந்தனின் சிறுமையினையும் உணர்கின்றது. இவ்வுணர்வே இயற்கையில் ஊடாடி நிற்கும் முழுமுதற்பொருளின்பால் புலவனின் நெஞ்சை ஈர்த்து அவனின் புலம்பன் (ஆன்மா) அம்முழுமுதற்பொருளை உணரத் தவிக்கும் தவிப்பையும் அம்முழுமுதற் பொருளோடு தன்னை இரண்டறக் கலப்பித்துக்கொள்ளும் வேட்கையினையும் அவன்பால் எழுப்பி அவன்றன் பாடல்களை மெய்யுணர்வு கனிந்ததாகச் செய்கின்றது. சுருங்கக்கூறின் இயற்கையின் புதல்வனே புலவன். இயற்கையின் அழுக்கத்தை உணர்ந்து உலகிற்கு விளக்கிக் கூறவந்த இறைவனின் பன்னனே புலவன்.

(வளரும்)

"ஒளியும் உயிரினங்களும்"

வை. கழராம்பன், அண்ணுமலைநகர்.

உயிரினங்களுக்கு மிகவும் இன்றியமையாதது ஒளி. ஒளிச் சேர்க்கை (Photosynthesis) நிகழ, செடிகட்கு ஒளி தேவைப்படு கிறது. ஒளிச்சேர்க்கை நிகழாவிடில் நிலைத்திணைகளுக்கு உணவு கிடைக்காமல் அவை இறந்துவிடும். விலங்குகளும் கதிரவன் ஒளியை மறைமுகமாகச் (indirectly) சார்ந்து இருக்கின்றன; நிலைத்திணைகள் ஒளிச்சேர்க்கையால் சேர்த்த உணவுப் பொருட்களையே விலங்குகள் உண்டுவாழ்கின்றன. இவ்வாறுக, ஒளி ஆற்றலைத் தருவதுடன், தூண்டல் (Stimulation) செய்யும் தன்மையுடையதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக, இருளில் வளர்ந்த செடிகள் ஒளியை நாடிச் செல் கின்றன. ஒளியின் தூண்டலே இதற்குக் காரணமாகும்.

விலங்குகளின் தோலிலுள்ள நிறத்துணுக்குகளை (Pigmentation), ஒளி தாக்குகின்றது. எடுத்துக்காட்டாகக், குகையில் வாழ் கின்ற விலங்குகளின் தோல், மெல்லிய வண்ணமாயும், வெயிலில் திரி யும் அதேவகை விலங்குகளின் தோல்வண்ணம் மாறுபட்டும் உள்ள தைக் காணலாம். குகைவாழ் விலங்குகள் வெயிலுக்கு வந்தவுடன், அவற்றின் தோலில் நிறத்துணுக்குகள் தோன்றுகின்றன. வெயிலில் திரியும் மாந்தரின் தோல் கன்றிப்போவது கண்கூடு; நிறத்துணுக்கு கள் மிகுதியாகத் தோன்றலே தோல் கன்றிப்போதல் ஆகும். நிறத் துணுக்குகள் விலங்குகட்கு மிகவும் பயனுடையவை. கதிரவனிலிருந்து வீசும் மிகுதியான கதிர்வீச்சுகளிடமிருந்து, உடலின் திசுக்களை நிறத் துணுக்குகள் காக்கின்றன. சில விலங்குகள் சூழ்நிலைக்கேற்ப தங்கள் தோல்வண்ணங்களை மாற்றிக் கொள்கின்றன. அவ்வாறு மாற்றிக் கொள்ள உதவுவன இந்நிறத்துணுக்குகளே!

பார்வைக்கு ஒளி இன்றியமையாதது. உணவைத்தேடி உண் பதற்கும், இணையைத்தேடி இணைவதற்கும், பகையைக்கண்டு விலகு வதற்கும் பார்வை பயன்படுகின்றது. இரவில் இயங்கும் (Nocturnal) விலங்குகள், தங்கள் வினைகட்கு ஒளியையே நாடுகின்றன, இரவில் இயங்கும் தன்மைவாய்ந்த மின்மினிப் பூச்சிகள் தங்களுக்கு வேண்டிய

ஒளியைத் தாங்களே ஆக்கிக்கொள்ளுகின்றன. ஆழ்கடல் விலங்குகளுக்கு; உயிரொளி (Biolumineseence) இன்றியமையாது தேவைப்படுகின்றது; கடலடியில் கதிரவன் ஒளி செல்லாததால், அங்குள்ள விலங்குகள் உயிரொளியைத் தோற்றிக்கொண்டு, அதன் உதவியால் தங்கள் உயிர்வினைகளைச் செய்கின்றன. மேலும் தோலிலுள்ள சில வகைக் கொழுப்புகளை உய்வுணுக (Vitamin D) ஒளி மாற்றுகின்றது. விலங்கின் தோல் அடர்ந்த கதிர்வீச்சால் தாக்கப்படுகின்றது. கதிர் வீச்சில் உள்ள புறவெண்ணீலக் (Ultra-violet) கதிர்களே இத்தாக்குதலுக்குக் காரணமாகும். விலங்குகள் மிகுந்த வெளிச்சத்தில் அல்லது ஒளியில் தங்காமல் ஒளிகுன்றிய நிழற்பகுதியை நாடுகின்றன; அம் மிகுந்த ஒளியினின்று வெளியேறும் கதிர்வீச்சினின்றுதப்பவே, அவை நிழற்பகுதியை நாடுகின்றன. நுண்ணுயிர்கள் (Micro orgonisms) புறவெண்ணீலக் கதிர்வீச்சில் இறந்துவிடுகின்றன. வியக்கத்தக்க அளவில் பெரும்பான்மையான விலங்குகள் ஒளியிலேயே வாழ்கின்றன; ஒளியை உட்கொள்ளுகின்றன.

ஒளியின் தூண்டலுக்கு உயிரினங்கள் உட்படுகின்றன. ஒளியின் தூண்டலுக்குச் சில எளிய சிறிய விலங்குகளின் (Green flagellates) உடல் முழுதும், பல பெரிய விலங்குகளின் சில குறிப்பிட்ட உறுப்புகள் மட்டும் செயல்படுகின்றன. தேனிக்களும் ஒளியைச் சார்ந்தே வாழ்கின்றன; அவற்றின் கண்கள் வெவ்வேறு வகையான ஒளிகளையும் உணர்ந்துகொள்ளும் தன்மைவாய்ந்தன. சில விலங்குகளின் இடப்பெயர்ச்சி விரைவையும் ((locomotory speed), ஒளி வயப்படுத்துகின்றது. சில புழுக்கள் (Pinnothères maculatus), ஒளியில் விரைவாக இயங்குகின்றன.

உயிரொளி (Bioluminescence):-

சில உயிரிகள் குளிர்ந்த ஒளியை (cold light) வீசுகின்றன· அவ்வொளி அவ்விலங்குகளின் உடலுக்குள்ளே தோன்றிய ஒளியாகும் இவ்வொளியையே உயிரொளி (Bioluminescence) என்று அறிவியலாளர்கள் பெயரிட்டுள்ளனர். எடுத்துகாட்டாக, மின்மினிப்பூச்சிகள் வெளிவிடும் மின்மினிஒளியும் உயிரொளியேயாகும்; கடற் பரப்பில் இரவில் தெரியும் ஒளியும் உயிரொளியேயாகும். கடலடியில் வாழும் விலங்குகள் உயிரொளியை வீசுகின்றன. தங்கள் இணைகளைக் (mates)

கண்டுபிடித்து இணைவதற்கும், உணவு தேடுதலுக்கும், பகைகண்டு விலகுதற்கும் தாக்குதற்கும் கடலடி விலங்குகள் இவ்வுயிரொளியையே பயன்படுத்துகின்றன. சிலவகை மீன்களும் இறால்களும் (crustaceans) உயிரொளி வீசுகின்றன. நியூட்டன் ஆர்வே (Newton Harvey) என்பார், வேதியல் வினையால் (chemical events) இவ்வொளி ஏற்படுகின்றது என்று கண்டுபிடித்துள்ளார்.

சிலநாட்களில் பகற்பொழுது நீண்டும் சுருங்கியும் மாறுபடுவதை நாம் அறிவோம். பகற்பொழுது நீண்ட நாட்களில் சில நிலத்திணைகள் (புகையிலை) பூக்கின்றன; சில நிலத்திணைகள் பகற்பொழுது சுருங்கிய நாட்களில் பூக்கின்றன; பெரும்பான்மையானவை இவ்விரு நிலைக்கும் இடைப்பட்ட காலத்தே தான் பூத்துக் காய்க்கின்றன. அவ்வாறே விலங்குகளும் மேலே கண்ட மூன்று நிலைகட்கும் முறையே இயங்குகின்றன. இனப்பெருக்கமும் (Reproduction), குடிமாற்றமும் (Migration), குறிப்பிட்ட காலங்களில் நிகழ்கின்றன. ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட பருவ காலத்தில் பறவைகளின் குடிமாற்றம் (Bird's migration) நிகழ்கின்றது.

இவ்வாறு ஒளி, உயிரினங்களின் வாழ்க்கையில் சிறப்பான பாகத்தைக் கொண்டுள்ளது. O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

ஆக்கப் பணிக்கு அணு ஆற்றல்

நாஞ்சில். செ. சுந்தரராசன், அறி. இளங்கலை.

கி. பி. 1945ஆம் ஆண்டு ஆகச்ஃடுத் திங்கள் ஐந்தாம் நாள் "இரோசிமா" (Hiroshima) என்ற சப்பானிய நகரின் மீது விசப் பட்ட முதல் அணுகுண்டு, உலக மக்களுக்கு அணுவின் கொடிய வன்மையைப் பறைசாற்றியது. அணுவின் அழிக்கும் ஆற்றலைக் கண்டு முழுவுலகும் நடுநடுங்கியது. அதன் ஆக்கவாற்றலை அறியாத பொது மக்கள் அதனைக் "கூற்றுவனின் தூதன்" எனக் கருதி அஞ்சினர். அஞ்சி நடுங்கிய மக்களுக்கு அதன் ஆக்கவாற்றல் பற்றித் தாளிகைகள் விளக்க முற்பட்டன.

> "அணுவாராய்ச்சி உலகுக்கு ஓர் அஞ்சற்குரிய அழிக்கும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறது. ஆனால் இதே ஆற்றலை ஆக்கத்துறையிலும் ஈடுபடுத்த முடியும் என்பதை மறந்துவிடலாகாது"
>
> —நியூயார்க் எரால்டு (Newyork Herald)

> "வரலாறு இதுவரையிலும் இது (அணுஆற்றல்) போன்ற ஓர் அழிக்கும்—அதே நேரத்தில் ஆக்கத் துறையில் பெரிய அளவில் உதவும் ஆற்றலைக் கண்டதில்லை"
>
> – அமெரிக்கக் குடியரசுத் தலைவர்.

அணுவின் அளவிறந்த ஆற்றல் பற்றி உலகம் நன்கறியும். ஆதலின் அதனை விடுத்து அதன் ஆக்க ஆற்றலை-எதிர்காலத்து எவ்வகையில் பயன்படுத்தலாம் என்பது பற்றி-விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

அணுவாற்றலைப் பற்றித் தெரிந்துகொள்ளுமுன், அஃது அணுவினின்று எவ்வாறு வெளிப்படுகிறது எனத் தெரிந்து கொள்ளுவது இன்றியமையாததாகும். அணு உலைகளில் உரேனியம் -235(அல்லது புளுடோனியம்) என்ற மூலகத்தின் அணு, ஆற்றல்மிக்க பொதுமின்னிகள்(நியூட்ரான்கள்)மூலம் இரு கூறுகளாகப் பிளக்கப்படுகின்றது. பிளக்கப்பட்ட இரு கூறுகளின் எடையின் கூட்டுத்தொகை, மூலக அணுவின் எடையை விடச் சற்று குறைவாகவிருக்கும். மறைந்து போன எடையளவுள்ள மூலகம் ஐன்சுடீனின் "ஆற்றல் சமன்பாட்டுக்" கிணங்க [ஆற்றல் = எடை + (ஒளிவேகம்)^2] வெப்ப ஆற்றலாக

வெளிப்படுகிறது ஒரு சீரெடை உரேனியம் இருபத்தாறு இலக்கம் சீரெடை நிலக்கரிமூலம் கிடைக்கும் ஆற்றலைத் தருகிறது. மேற்கூறிய வாறு அணுவுலையினின்று வெளிப்படும் வெப்ப ஆற்றலை, வானவூர்தி, கப்பல், ஏவுகணை முதலியனவற்றை இயக்கவோ, மின்னாற்றலை உரு வாக்கவோ பயன் படுத்தலாம்.

மின் ஆற்றல்.

இக்கால் நாம் நீர்வீழ்ச்சிகளின் மூலமும், நிலக்கரி முதலிய எரி பொருள்களால் ஆவியாக்கப்பட்ட நீராவியின் மூலமும மின்னாக்கிகளை (Generators) இயக்கி மின்சாரம் உண்டாக்குகிறோம். இதே முறையில் தான் அணுவாற்றலும், மின்னாற்றலாக மாற்றப் படுகிறது.

அணுவுலைகளின்று வெளிப்படும் வெப்ப ஆற்றல், தண்ணீரை நீராவியாக மாற்றுகிறது. இந்நீராவி பொறிகளை இயக்கி மின்னாற்ற லைத் தோற்றுவிக்கின்றது. பலரும் அணுவாற்றல் மூலம் மின்சாரம் கிடைத்தால் அது மிகவும் மலிவாகவிருக்கும் என நம்புகிறார்கள். இது தவறுடைத்து. மலிவாகக் கிடைக்காவிடில் எதற்காக அணுவாற்றலைப் பயன் படுத்தவேண்டும் என்ற வினா எழுவது இயற்கையே. இக்கால் நீர்வீழ்ச்சிகளின் ஆற்றல் மூலம் கிடைக்கும் மின் ஆற்றல் நம் தேவையை நிறைவு செய்வதில்லை. ஆதலால் நாம் நிலக்கரி முதலிய எரிபொருள்களைப் பயன்படுத்தி "வெப்ப மின்னாற்றல் நிலையங்களில்" (Thermal stations) மின்னாற்றல் உண்டுபண்ண வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வகை ஆலைகளினின்று வெளிவரும் புகை பொது மக்களின் உடல் நலத்திற்கு ஊறு விளைக்கின்றது. ஆனால் அணு உலைகளின்றும் புகை வருவதில்லை. இதனால் சுற்றுப்புறமும், நகருமம் தூய்மையாக விளங்கும். மக்கள் உடல் நலத்திற்கும். ஊறுவிளையாது.

வான வெளியிலே...

அணு ஆற்றலால் வானவூர்தி இயக்குவது பற்றி மேனாட்டுப் பொறியியல் வல்லுநர் ஆய்ந்து வருகின்றனர். நாம் எரிநெய் (பெட் ரோல்) மூலம் வானவூர்தியை இயக்குங்கால், அஃது அடிக்கடி கீழறங் கித் தனக்கு வேண்டிய எரிநெய்யை நிரப்பிக் கொள்ள வேண்டியுள் ளது. ஆயின் அணுவாற்றலால் இயங்கும் வானவூர்தி கீழிறங்காது உலகைப் பன்முறை வலம்வர முடியும். ஆனால் வானவூர்தியின் அணு

உலையினின்று வெளிப்படும் கதிரியக்கத்தினின்று (Radiation) வலவனையும் (Pilot), பயணிகளையும் பாதுகாப்பது ஆய்வாளர்கட்குப் பெரிய தலைவலியைக் கொடுக்கின்றது. பொதுவாக அணு உலைகளின் கதிரியக்கக் காவலுக்காகப் பளுவான காப்புச்சுவர்களுள்ளன. ஆயின், வானவூர்தியில் அவற்றை நிறுவுவது, ஊர்தியின் எடையைப் பன்மடங்கு அதிகமாக்குவதுடன், வேறுபல தொல்லைகளையும் விளைக்கும். இதுபற்றி அறிவியல்-பொறியியல் ஆய்வாளர்கள் முடுகிய ஆய்வு நடத்தி வருகின்றனர்.

விண்வெளி ஆய்வின் வெற்றிப்படிகளை உருசியரும், அமெரிக்கரும் தாண்டிக்கொண்டிருக்கும் விரைவைப் பார்க்கும்பொழுது, சில ஆண்டுகளில் அடுத்த கோள்களுக்கு (Planet) மாந்தன் செல்வது இயல்பே எனத் தெரிகிறது. அவ்விண் ஏகும் விண்வெளிக்கப்பல்கட்கு (Space Ships) எரி நெய்யைவிட, அணு ஆற்றலே ஏற்றதாம்.

நீர்மூழ்கிக்கப்பல்கள் இக்கால் பொதுவாக மின்கலங்கள்(Battery) மூலம் ஓட்டப்படுகின்றன. மின்கலங்கட்கு ஆற்றலேற்றும்பொழுது (Recharge) தீயதை (oxygen) தேவைப்படுகிறது. அதற்காக அவை அடிக்கடி மேலே வரவேண்டும். இக்குறையை அணுவாற்றல் தீர்த்து வைக்கின்றது. கடலுக்கடியில் திங்கட்கணக்கில் மாந்தன் பயணம் செய்யும் காலம் வந்துவிட்டது. இந்நாளில் அணுவாற்றலால் நீர் மூழ்கிக் கப்பல்கள் இயக்கப்படுகின்றன.

மருத்துவப் பணி

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம் — இது பழமொழி.

இந்தக் குறைவற்ற செல்வத்தைக் காப்பதற்கும் அணுவாற்றல் பயன்படுகிறது. புற்றுநோய் எனும் ஆட்கொல்லி நோயைப் போக்க 'ஒளியம்' (Radium) என்ற மூலகத்தைப் பயன் படுத்துகிறார்கள். இம் மூலகம் மிகக்குறைந்த அளவிலேயே கிடைக்கின்றது. ஆதலின் இதற்கு ஈடான வேறொரு பொருளைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டு, அதில் வெற்றி கண்டு விட்டனர். அதுதான் "கதிரியொப்பான்" (ரேடியோ-ஐசடோப்), இஃது அணு உலைகளினின்று கிடைக்கிறது. இது புற்றுநோயை நலமாக்குவதுடன், வேறுபல நோய்களைக் கண்டு

பிடிக்கவும் மருத்துவர்களுக்குப் பேருதவியாயிருக்கின்றது. "உயிரை மாய்க்கப் பயன்பட்ட அணுஆற்றல் (அணுக்குண்டு மூலம்), உயிரைக் காக்கவும் பயன்படும்" என்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டாகும்.

நிலக்கரி தீர்ந்து விட்டால்...!

பால்மர். சி. புட்னம் என்ற அறிவியலறிஞரின் கணக்குப்படி உலகிலுள்ள நிலக்கரி, எரிநெய் முதலிய எரிபொருட்கள் இரண்டு, மூன்று நூற்றாண்டுகளில் தீர்ந்து விடுமாம். அதற்குப்பின்.........? நினைக்கவே அச்சம் எழுகின்றது. நம் பிறங்கடை(வாரிசு)கள் நம் மூதாதையரைப்போல் மின்னாற்றலோ, வேறு இயந்திர ஏந்துகளோ இன்றி அவர்கள் கல்லோடு கல்லை உரசி தீவைத்துத் தான் தங்கள் தேவையை நிறைத்துக்கொள்ள வேண்டுமா? அணு ஆற்றல் மட்டும் கண்டுபிடிக்கப்படாதிருந்தால் இந்நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஆயின் "இறைவனின் ஈவாய்" கிடைத்தற்கரிய அணுவாற்றல் கிடைத்துள்ளது.

உலகில் சுரங்கங்களினின்று கிடைக்கும் உரேனியம், தோரியம் முதலியவற்றின் மூலம் நமக்குத் தேவையான ஆற்றல் இன்னும் இரு பது நூற்றாண்டுகட்குக் கிடைக்கும். அதற்குப்பின்னருங்கூட உரேனியம், தோரியம் முதலியவற்றைப்பாறைகளினின்று பிரித்தெடுக்க முடியுமென அறிவியலார் திடமாக நம்புகின்றனர். ஒரு கல்லெடை (Ton) கற்பாறையினின்று நான்கு சீரெடை உரேனியமும், பன்னிரண்டு சீரெடை 'தோரியமும்' கிடைக்குமென ஆய்வுப்புள்ளி விளக்கங்கள் கூறுகின்றன. அஃதாவது ஒரு கல்லெடை கற்பாறையினின்று கிடைக்கும் அணு எரிபொருள்கள் முந்நூற்றிருபது கல்லெடை நிலக்கரிக்கு ஈடாகும். ஆதலின் இனிப் பல்லாயிரம் ஆண்டுகட்கு "ஆற்றல் பஞ்சம்" பற்றிய கவலையேயில்லை.

அணுக்கத்தி

அணு ஆற்றல் எனும் ஆற்றல்மிகு கத்தி நம் கையிற் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் அறுவை மருத்துவம் செய்து மாந்தருக்கு நன்மையும் செய்யலாம்; அதேவேளையில் ஈவிரக்கமின்றி நெஞ்சிலே குத்திக் கொலையும் செய்யலாம். கொலை செய்தால் அது கத்தியின் குற்றமன்று. அதைப்பிடித்திருக்கும் மாந்தனின் குற்றமேயாம்.

திருக்குறள் அதிகார அடைவு வெண்பா

புலவர். வே அரங்கசாமி.

க

[1]கடவுளர் வாழ்த்து; [2]மழைச்சிறப்பு; [3]நீத்தா
ருடைப்பெருமை; நல்[4]லறங் கூறல்;[5]இல் வாழ்க்கை;
[6]மனைச்சீர்; [7]மகப்பேறு; [8]அன்பு[9]விருந் தோம்பல்;
[10]இனியகூறல் [11]செய்ந்நன்றி என்று. (11)

1. கடவுள் வாழ்த்து. 2. வான்சிறப்பு. 3. நீத்தார் பெருமை. 4. அறன் வலியுறுத்தல். 5. இல்வாழ்க்கை. 6. வாழ்க்கைத் துணைநலம் 7. புதல்வரைப் பெறுதல். 8. அன்புடைமை. 9. விருந்தோம்பல். 10. இனியவை கூறல். 11. செய்ந்நன்றியறிதல் என்னும் பதினொன்றும்.

கடவுள் எனும் சொல் விதி கருதி அர் விகுதி பெற்றது. நீத்தார் உடைப் பெருமை என்பதனுள் உடை என்பது இடைப்பிறவரல்.

உ

[12]நடுவோ(டு) [13]அடக்கம்; [14]ஒழுக்க முடைமை;
அடைவு [15]பிறனில் விழையாமை; நற்[16]பொறை;
தீய [17]அழுக்காறு; [18]வெஃகல்; [19]புறங்கூறல்;
ஆய[20]பய னில்சொல்லா மை. (9)

(முன்பக்கத் தொடர்ச்சி)

கார்டன் டீன் என்ற அமெரிக்க அறிஞர் கூறுகிறார்: மாந்தவினம் அணுவூழி என்றவோர் அறையினுள் நுழைந்திருக்கின்றது. அது மிகப்பெரிய அறை. வேண்டிய ஒளி இல்லை. ஆதலால் அவ்வறையின் பொருள்கள் நம்கண்களுக்குச் சரிவரத்தெரிவதில்லை. ஆயின் நாம் வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்து விட்டோம். இனிப் புறமுதுகு காட்டப்போவதில்லை. அறிவுடன் துணிவாக முன்னேக்கிச் செல்வோம். O

உதவிய நூல்கள்:

1. "Report on Atom" - Gorden Dean.
2. "Atomic Energy in cosmic and Human Life" - George Gamov.

12. நடுவுநிலைமை. 13. அடக்கமுடைமை, 14. ஒழுக்கமுடைமை. 15. பிறனில் விழையாமை. 16. பொறையுடைமை. 17. அழுக்காறுமை 18. வெஃகாமை. 19. புறங்கூறுமை. 20. பயனில சொல்லாமை.

ஆய என்னும்சொல் பயனில சொல்லாமை என்னும் எதிர்மறையைத் தழுவி உடன்பாடுபோலத் தோன்றும் அழுக்காறு, வெஃகல், புறங்கூறல்களை மறுத்தமை அறிக. அதனானே, தீய என்னு மடைமொழி தந்தமையுமாம்.

௩.

[21]தீவினை அஞ்சிமேல் [22]ஒப்புர வாற்றிநல்
மாவினை [23]ஈகையால் நற்[24]புக ழெய்தி
[25]அருளாற் [26]புலால்மறுத் தார்[27]தவத்தாற் [28]கூடாப்
பெருவொழுக்கம் [29]கள்ளமனம் போக்கு. (9)

21. தீவினைஅச்சம். 22. ஒப்புரவறிதல். 23. ஈகை. 24. புகழ். 25 அருளுடைமை. 26 புலால் மறுத்தல். 27. தவம். 28. கூடா ஒழுக்கம். 29. கள்ளாமை.

கள்ளமனம் போக்கு என்பதனானே கள்ளாமை வற்புறுத்தப்பட்டது. பெரு என்னும் சொல் சிறந்தது என்னும் பொருளதன்று. கூடாததாகிய பெரிய (மிக்க) ஒழுக்கம் தீய நெறிகளைக் களைக என்பதற்காம். அச்சொல்லும் போக்கு என்பதனைத் தழுவும்.

௪

[30]வாய்மை; [31]வெகுளாமை; [32]இன்னுசெய் யாமையும்
வாய்த்தவுயிர் [33]கொல்லாமை வாழ்வு[34]நிலை யாமையும்
எண்ணத் [35]துறவேற்று [36]மெய்கண் [37]டவாவறுத்து
எண்ணில்[38]ஊழ் வெல்ல லறம். (9)

30. வாய்மை. 31. வெகுளாமை. 32. இன்னு செய்யாமை. 33. கொல்லாமை 34. நிலையாமை. 35. துறவு. 36. மெய்யுணர்தல். 37. அவாவறுத்தல். 38. ஊழ்.

வாய்த்த உயிர்கொல்லாமை என்பதனுன் வாழப்பிறந்த உயிர்களைக் கொல்லுமுரிமை எவருக்கு மில்லை என்பதாம். எண்ணத்துறவு-வெளிப்புனைவன்று; உள்ளத்தாற் பொய்யாதொழுகல். அன்றியும், மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின் என்பதற்கொப்ப உள்ளத்தால் துறவு கொள்ளலாம்.

ரு

39இறைமாட்சி 40கல்வியுங் 41கல்லாமை 42கேள்வி
43அறிவுடைமை 44குற்றம் கடிதல் 45பெரியாரைத்
தன்கோடல் 46சிற்றினம் நீக்கித் 47தெரிந்துசெயல்
மன்48வலி 49கால50மிடம் தேர். (12)

39. இறைமாட்சி. 40. கல்வி. 41. கல்லாமை. 42. கேள்வி. 43. அறிவுடைமை. 44. குற்றங்கடிதல். 45. பெரியாரைத் துணைக்கோடல். 46. சிற்றினஞ் சேராமை. 47. தெரிந்து செயல்வகை. 48. வலியறிதல். 49. காலமறிதல். 50. இடனறிதல்

நீக்கி-சேராமல்; மன்-நிலையான; தேர்-அறிக.

சா

51தெரிந்து தெளிதல் 52வினையாடல் 53சுற்றம்
பரிந்துதழால் 54பொச்சாவாச் 55செங்கோல் 56கொடுங்கோல்
57வெருவந்த செய்யாமை 58கண்ணோட்டம் 59ஒற்று
மரு60வூக்கம் 61இன்மை மடி. (11)

51. தெரிந்து தெளிதல். 52. தெரிந்து வினையாடல், 53. சுற்றம் தழால். 54. பொச்சாவாமை. 55. செங்கோன்மை. 56. கொடுங்கோன்மை. 57. வெருவந்த செய்யாமை. 58. கண்ணோட்டம். 59. ஒற்றுடல். 60. ஊக்கமுடைமை. 61. மடிஇன்மை.

தெரிந்து என்னும் சொல் வினையாடலையும் தழுவியது. எனவே, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் எனக் கொள்க. இன்மை மடி என்பது மடியின்மை எனப் பின்னர் வந்தது முன்னுக வந்து பொருள்தரும். மரு என்றது மருவிய என்பதன் எச்சமெனக் கொள்க. மருவூக்கம் எனின் தொடர்ந்து வரும் ஊக்கமுடைமையும் என்க.

௭

[62]ஆள்வினை மேற்கொண் [63]டிடுக்கண் ணழியாமை
நீள்புகழ் நல்ல[64]மைச்சு [65]சொல்வன்மை செய்[66]வினைத்
தூய்மையத் [67]திட்பம் [68]வினைசெயல் [69]தூதுடனே
ஆய்ந்து[70]மன் சேர்ந்தொழுக லாம். (9)

62. ஆள்வினையுடைமை. 63. இடுக்கணழியாமை. 64. அமைச்சு. 65. சொல்வன்மை. 66. வினைத்தூய்மை. 67. வினைத்திட்பம். 68. வினை செயல்வகை 69. தூது. 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

அத்திட்பம் என்றது வினைத்தூய்மை என்றதனானே அவ்வினையினது திட்பம் என்றவாறும்.

௮

[71]குறிப்போ [72]டவையறித [73]லஞ்சாமை [74]நாடு
நிறை[75]யரண் நற்[76]பொருள் செய்தல் [77]படைமாட்சி
அச்[78]செருக்கு [79]நட்பு[80]நட்பாய் தல்[81]பழைமை [82]தீநட்பு
அக்[83]கூடா நட்பு மவை. (13)

71. குறிப்பறிதல். 72. அவையறிதல். 73. அவை அஞ்சாமை. 74, நாடு. 75. அரண். 76 பொருள் செயல்வகை. 77. படைமாட்சி. 78. படைச்செருக்கு. 79. நட்பு. 80. நட்பாராய்தல். 81. பழைமை. 82. தீநட்பு. 83. கூடாநட்பு.

அஞ்சாமை–அவையஞ்சாமை என முன்னருள்ளதைத் தழுவியது அச்செருக்கு என்பதும் படைமாட்சியின் பிற்பட்ட படைச்செருக்காம்.

௯

[84]பேதைமை [85]புல்லறி வாண்மை [86]இகல்[87]பகை
ஒததன் மாட்சி [88]திறம்தெளித [89]லுட்பகை
நற்[90]பெரி யார்ப்பிழையாப் [91]பெண்வழிச் சேர்தலுங்
குற்ற[92]வரை வின்மகளிர் [93]கள். (10)

84. பேதைமை. 85. புல்லறிவாண்மை. 86. இகல். 87. பகை மாட்சி. 88. பகைத்திறம் தெளிதல். 89. உட்பகை. 90. பெரியாரைப் பிழையாமை. 91. பெண்வழிச்சேறல். 92. வரைவின் மகளிர். 93. கள்ளுண்ணாமை.

வரைவின் மகளிர், கள்ளுண்ணல் குற்றமென்ப.

௧௦

[94]சூது [95]மருந்து [96]குடி[97]மானம் நற்[98]பெருமை
ஓது[99]சான்றாள் [100]பண்புடைமை [101]நன்றியில் செல்வம்[102]நாண்
நற்[103]குடி செய்[104]உழவு [105]நல்குரவு தீ[106]இரவு
கொல்[107]லிரவச் சங்[108]கயமை காண். (15)

94. சூது. 95. மருந்து. 96. குடிமை. 97. மானம். 98. பெருமை. 99. சான்றாண்மை. 100. பண்புடைமை. 101. நன்றியில் செல்வம். 102. நாணுடைமை. 103. குடிசெயல்வகை. 104. உழவு. 105. நல்குரவு. 106. இரவு. 107. இரவச்சம். 108. கயமை.

௧௧

[109]தகையணங்கு; உள்[110]குறிப்புக் காண்;[111]புணர் இன்பம்
மிகை[112]நலச்சொல்; [113]காதல் சிறப்புரைத்தல்; [114]நாண்,துறவு
கூறல்; [115]அலரறிவு; தன்[116]பிரி வாற்றாமை.
மீறும் [117]படர்மெலித லென்று. (9)

109. தகையணங்குறுத்தல். 110. குறிப்பறிதல். 111. புணர்ச்சி மகிழ்தல்.. 112, நலம்புனைந்துரைத்தல். 113. காதற் சிறப்புரைத்தல். 114, நாணுத் துறவுரைத்தல். 115. அலர்அறிவுறுத்தல். 116. பிரிவாற்றாமை. 117. படர்மெலிந்திரங்கல்.

௧௨

[118]கண்விதுப்பு; நெஞ்சப் [119]பசப்பின் பருவரல்;
மண்டும் [120]தனிப்படர் கொள்ளல்; [121]நினைந்தோர்
புலம்பல்; [122]கனவுநிலை கூறல்; [123]பொழுதின்
இரங்கல்; [124]உறுப்புநலம் தீர். (7)

118. கண்விதுப்பழிதல். 119. பசப்புறு பருவரல். 120. தனிப்படர் மிகுதி. 121. நினைந்தவர் புலம்பல். 122. கனவுநிலை உரைத்தல். 123. பொழுதுகண்டிரங்கல். 124. உறுப்புநலன் அழிதல்.

(வளரும்)

விலங்கியல்.

பறவைகளின் பறத்தற் பண்புகள்.

நா. சௌந்தரராசன்,
மூன்றும் ஆண்டு விலங்கியல் இளங்கலை,
அண்ணுமலைப்பல்கலைக் கழகம்.

முதுகென்பில்லன (Invertebrates)வற்றில் சிறுதும்பிகளும் (Insects), முதுகென்புள்ளன(Vertebrates)வற்றில் பறவைகளும் பறக்கும் தன்மை வாய்ந்தன. பறவைகட்கு முன்னமேயே, தும்பிகள் தோன்றியிருத்தல் வேண்டும். பாலூட்டிகளில் (mammals) வௌவாலும், ஊர்வன(reptiles)வற்றில் சிலவும், சில மீன்களும் பறத்தல் தன்மையைப் பெற்றிருக்கின்றன. எனினும் மற்ற விலங்குகளைவிட, பறவைகளின் உள்ளும் புறமும் பறத்தற்கு வேண்டியவாறு சிறப்புற அமைத்துள்ளன. அவற்றை முறையே காண்போம்.

1. உருவமைப்பு (Shape of the body) :-

பறவை காற்றில் பல்வேறு திசைகளில் செல்லவேண்டியுள்ளது; காற்றுடனும், காற்றை எதிர்த்தும், காற்றைக் கடந்தும் செல்ல வேண்டியுள்ளது. காற்று பறப்பதற்குத் தடையாக உள்ளது; பறத்தலின் விரைவைக் குறைக்கின்றது. பறவையின் முன்னும் பின்னும் படகுபோன்ற அமைப்பு (boat-like construction) உள்ளதால், காற்றின் தடை வெகுவாகக் குறைகின்றது. நீண்ட வளைகின்ற கழுத்து, பறவையின் இழுத்தல் (Specific gravity) தன்மையைக் குறைக்கின்றது. மேலும் எடை குறைவான உறுப்புகள் பறவையின் மேற்பகுதியிலும், எடைமிகுந்த உறுப்புகள் உடற் கீழ்ப்பகுதியிலும் அமைந்துள்ளமையால், பறவை குறைந்த புவியீர்ப்பு மையத்தையே (low centre of gravity) பெற்றுள்ளது.

2. இறக்கைகளும், சிறகுகளும் (Wings and Feathers) :-

முன்னங்கால்கள், காற்றில் பறக்க உதவும் இறக்கைகளாகக் காற்றுச் செலவிற்கும் (aerial locomotion), பின்னங்கால்கள் தரைச் செலவிற்கும் (terrestrial locomotion) பயன்படுகின்றன. இறக்கை

களும் வாலும் சிறகுகளால் போர்த்தப்பட்டுள்ளன. சிறகுகள் பறப்பதற்குத் துணை செய்கின்றன. பறக்கும்போது இறக்கைகள் விரிந்தும், தரையில் இருக்கும்போது மடங்கியும் உள்ளன. இறக்கைகளை மேன் மேலும் முன்னேக்கியும் அசைத்துப் பறவைகள் பறக்கின்றன. அலகையும், கால்களையும் தவிர, எல்லா உறுப்புகளும் சிறகுகளால் மூடப்பட்டுள்ளன. அவை வெப்ப அரிதில் கடத்திகள் (non-conductors of heat) ஆகும். எனவே பறவையின் உடற்புறவெப்ப இழப்பு (surface loss of heat) தடுக்கப்படுகின்றது. சிறகுகள் அடங்கிய விசிறி போன்ற வால், வானூர்தியின் சுக்காணைப் (rudder) போல் திசையை மாற்றப் பயன்படுகின்றது.

3. பறப்புத்தசைகள் (Flight muscles) :-

மீன், நிலநீர் வாழ்வன (amphibians) முதலியவற்றின் மிகுந்த முதுகுத் தசைகள் (back muscles) போல், பறவைகளின் முதுகில் காணப்படவில்லை; மிகவும் குறைவான தசைகளே உள்ளன. ஆனல் பறப்பதற்கு இன்றியமையாத தோள்தசைகள் (Pectoral muscles) நன்ருக வளர்ந்துள்ளன. மார்பெலும்புடன் (Stornum) பறப்புத் தசைகள் இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. மூவகையான பறப்புத்தசைகள் உள்ளன. அவை:

(1) தோள் பெருந்தசை (Pectoralis major)

(2) தோள் சிறுதசை (Pectoralis minor)

(3) குறுக்கைத் தசை (Coraco-brachialis)

தோள் பெருந்தசை:- இது மார்பெலும்பிலிருந்து தோன்றி, தோளெலும்பின் கீழ்ப்பக்கத்தில் செருகப்பட்டுள்ளது. இதுவே பெரியதும் நீண்டதுமான தசையாகும். இதன் சுருக்கத்தால்(contraction) இறக்கையின் கீழசைப்பு (down-stroke) நிகழ்கின்றது.

தோள் சிறுதசை:- இது மார்பெலும்பிலிருந்து தோன்றி, மூவெலும்புத்தொளை (foramen triossium) வழியே நுழைந்து, தோளெலும்பின் மேல்முனையில் வந்து இணைகின்றது. இதன் சுருக்கத்தால் இறக்கையின் மேலசைப்பு (upward-stroke) நிகழ்கின்றது.

குறுக்கைத் தசை:- மேலே கண்ட தசைகளைக் காட்டிலும் மிகவும் சிறியது. இது குறுக்கை எலும்பிலிருந்தும் (coracoid), மார்பு எலும்பிலிருந்தும் தோன்றித் தோள் எலும்புடன் இணைந்துள்ளது. இத்தசையின் சுருக்கத்தால் இறக்கைகள் உள்ளிழுக்கப் படுகின்றன அல்லது மடக்கப்படுகின்றன. இவ்வாறு பறப்புத்தசைகள் பறவைகளின் பறத்தற் பண்புகளுக்கேற்ப மாற்றப்பட்டுள்ளன.

4. சட்டகம் (Skeleton) :-

பாலூட்டிகளின் எலும்புகள் கடினமாகவும், நடுவே குழம்புகளைப் (marrow) பெற்றும் உள்ளன. ஆனால் பறவைகளின் எலும்பின் நடுவே காற்றறைகள் (air-cavities) உள்ளன. நுரையீரல்களின் காற்றுப்பைகளும் (air-sacs of lungs), எலும்பின் காற்றறைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இத்தன்மை காற்றிணைப்பு (Preumaticity) என்று குறிக்கப்படும். இத்தன்மையால் பறவையின் எடையும் ஈர்ப்பும் குறைகின்றன. இத்தன்மை பறவைகளுக்கே உரிய சிறப்பான தன்மையாகும்.

கழுத்துப் பாகத்தைத் தவிர, மற்ற இடங்களில் உள்ள முதுகுச் சிற்றெலும்புகள் (Vertebrae) நன்றாகப் பிணைக்கப்பட்டு ஒரே கூட்டெலும்பாக உள்ளன. இத்தன்மை உள்ளுறுப்புகள் இடம் பெயராமல் (dislocation) பாதுகாக்கின்றது. கழுத்துப் பாகத்தில் உள்ள சிற்றெலும்புகள் அசையும் தன்மையைப் பெற்று இருப்பதாலும், ஒரே ஒரு நடுமுள்ளெலும்பு (single occipital cordyle) இருப்பதாலும், பறவை தன் கழுத்தை எளிதே எல்லாப்பக்கங்களிலும் திருப்ப முடிகின்றது. மாந்தனுக்கு இரண்டு நடுமுள்ளெலும்புகள் உள்ளமையால், கழுத்தை எல்லாப்பக்கங்களிலும் திருப்பமுடியவில்லை. பறவையின் குறுக்கை எலும்பும் தோள்பட்டை எலும்பும், இறக்கை அசைவால் ஏற்படும் உள் அழுத்தம் (internal pressure) உடலுள்ளுறுப்புகளைத் தாக்காதவாறு காக்கின்றன. அசையும் தன்மைவாய்ந்த வாலெலும்பு சுக்கானைப்போல் திசைமாற்ற உதவுகின்றது. பறவையின் கூர்மையான மூக்கு காற்றைக் கிழித்து முன்னேற உதவுகின்றது. மேலும் மார்பெலும்பில் அமைந்துள்ள இறக்கையெலும்பு (keel) மிகவும் இன்றியமையாதது. இவ்வெலும்புடன்தான் பறப்புத் தசைகள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வெலும்பு இல்லாத பறவைகள் பறக்க முடியாதவைகளாக இருக்கின்றன.

5. உயிர்ப்பு மண்டலம் (Respiratory system) :-

நுரையீரல்கள் மார்பறையில் தொங்கிக் கொண்டு இல்லாமல், பழுவுகளுடன் (Ribs) இணைக்கப்பட்டுள்ளன. அவை திண்மையாயும், பஞ்சைப்போன்றும் உள்ளன; எலும்புகளின் காற்றறைகளுடன் தொடர்புகொண்டு காற்றிணைப்புத் தன்மையை (preumaticity) எடுத்துக்காட்டுகின்றது. அவற்றின் காற்றுப்பைகள் (air-sacs) எப்போதும் மிகுந்த காற்றை அடக்கியுள்ளன. இதனுல் அரத்தத்தைத் தூய்மைசெய்யப் போதுமான காற்றும், வேண்டிய மிகுந்த வெப்பமும் கிடைக்கின்றன. பறவையினுள் உள்ளுயிர்ப்பும் (Internal respiration) இக் காற்றுப்பைகளால் ஏற்படுகின்றது. காற்றில் மிதக்க (buoyancy) இக் காற்றுப்பைகளால் உதவமுடிகின்றது.

6. உள்ளுறுப்புகள் (Viscera) :-

காற்றிலேயே மிகுதியும் வாழ்வதால், பறவையின் உள்ளுறுப்புகள் நன்ருக மூடப்பட்டுள்ளன. அவை நெருக்கமாகவும், ஒன்றன்மேலொன்ருகவும், காலி இல்லாமல், நன்ருக அடுக்கப்பட்டுள்ளன.

7. அரத்தவோட்ட மண்டலம் (Blood vascular system) :-

இறக்கைகளின் விரைவான, தொடர்ந்த இயக்கத்திற்கு மிகவும் தூய அரத்தம் தேவைப்படுகின்றது. நெஞ்சாங்குலே (heart) நான்கு அறைகளாகப் பகுக்கப்பட்டு, தூயஅரத்தமும் தூய்மையற்ற அரத்தமும் கலக்காமல் அறவே பிரிக்கப்பட்டுள்ளன. எனவே இறக்கைகளுக்கு வேண்டிய தூய அரத்தம் தொடர்ந்து தடையின்றிக் கிடைக்கின்றது.

8. மூளையும் உணர்வுறுப்புகளும் (Brain and sense organs) :-

முகர் உணர்வும் (sense of smell), உறழ் உணர்வும் (sense of touch) பறவைகளிடம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே வெளியுலக வினைகளைத் தெரிந்துகொள்ள அவை தம் கண்களையே பெரும்பகுதி நம்பவேண்டியுள்ளன. ஆதலால் பறவையின் கண்கள் சிறப்புற்று விளங்குகின்றன: அதன் கண்ணில் உள்ள சீப்பு போன்ற சிற்றுறுப்பு (Pecten) பறவையின் பார்வைக் கூர்மைக்குக்

நிலவின் கதை

த. சலாவுதீன், அறி. இ; ஆ. ப. (B. Sc., B.T.)

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் நிலவினைக்கண்டு இன்புற்று வருகின்றோம். புலவர் பலர் பாக்கள் எழுதி அதன் பெருமையினை வானளாவப் புகழ்ந்து கொண்டு வருகின்றனர். அதன் குளிர்ந்த ஒளியினை அழகு மங்கையரின் முகத்தினுக்கு ஒப்பிடுகின்றோம். இன்றும் பலர் அவ்வாறே வண்ணித்து வருகின்றனர். ஆனால் அறிவியல் வளர்ந்த இந்நாளில் அவ்வாறு செய்வது சிறந்ததாகாது. நாளுக்கு நாள் நிலவினைப்பற்றிய வியத்தகு செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இன்னும் சில ஆண்டுகளில் மாந்தன் நிலவிற்குச் செல்லப் போகின்றான்.

பழங்காலத்தில் மக்களுக்கு நிலவினைப்பற்றி ஒன்றும் தெரியாது. நிலவு குளிர்ந்த ஒளியினைத் தருகின்றது என்பது மட்டும் தெரியும். நிலவு எவ்வாறு தோன்றியது? அதன் அமைப்பு எவ்வாறுள்ளது? அதில் என்ன இருக்கின்றது? என்பவை யாருக்கும் தெரியாதவை. அந்தக்காலத்தில் நிலவினைப்பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்க ஆற்றலுமில்லை. ஆகையால் மாந்தன் தன் கற்பனைத் திறத்தினால் நிலவு என்னவாக இருக்குமென்பதைக் கருதுகோளாகவே கூறினான்.

கற்பனைக் கதைகள்: கிரேக்க நாட்டினர் நிலவைப் பெண் கடவுளாக எண்ணி வணங்கினர். அதை இரவின் அரசி என்றும் கூறி வந்தனர். சீனர்கள் நிலவு பிறந்த நாளை (அவர்கள் கணக்கின்படி)

(முன்பக்கத் தொடர்ச்சி)

காரணமாகின்றது, கண்களைச்சுற்றியுள்ள சிற்றெலும்புகள் (sclerotic plates), விழிக்கோளத்தின் குவிதன்மையைக் (convexity) கூட்டவோ குறைக்கவோ உதவுகின்றன. காற்றில் பறக்கும்போது ஏற்படும் காற்றின் அழுத்தத்திலிருந்து, பறவைகள் அவ்வெலும்புத் துணுக்குகளின் உதவியால் தங்கள் கண்களைக் காத்துக் கொள்ளுகின்றன.

இவ்வாறு பறவைகளின் உடல் அமைப்பு உள்ளும் புறமும் பறத்தற் பண்புகளுடன் சிறந்து விளங்குகின்றன. O

ெவாணவேடிக்கைகளுடன் கொண்டாடினர். பெருதேசத்தவர் நிலவிற்காக வெள்ளியால் கோயில்கள் அமைத்தனர். பூனையின் கண்ணின் மணி நிலவைப் போல் இருப்பதைக்கண்டு எகிப்தியர்கள் பூனைகள் புனிதத் தன்மை உடையவை என நினைத்தனர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் உலகின்பல பாகங்களிலிருந்த மக்கள் நிலவைக் கடவுளாக எண்ணினர்.

நிலவில் பலர் பலவகையான உருவங்களைக் கண்டனர்; அவற்றில் சில பெண் உருவங்கள்; சில ஆண் உருவங்கள். இந்தியக் குடிகள் சிலர் நிலவில் ஒரு பெண் கூடையைத் தலையில் சுமந்த வண்ணம் இருக்கின்றாள் என்றனர். சிலர் ஒரு பெண் தன் கையில் ஒரு பூனையை வைத்திருக்கின்றாள் என்று நினைத்தனர்; சாமோன் இனத்தவர்கள் அவள் நெய்து கொண்டிருக்கிறாள் என்றனர். சிலர் அவள் தலை கீழாக இருந்து பொத்தகம் படித்துக்கொண்டிருக்கிறாள் என்றனர். அவள் ஒன்றும் செய்யாமல் இருக்கின்றாள் என்று சப்பானியர்கள் கூறினார்கள்.

வேறு சிலர் அங்கிருப்பது ஆண் என்றனர். செருமானியர்கள் அங்கிருப்பவன் முட்டைக்கோசைத் திருடிக்கொண்டுபோகிறான் என்று எண்ணினர். சில்ட் தீவைச் சார்ந்த மக்கள், அவன் ஆட்டைத் திருடிக் கொண்டு போகிறான் என்று எண்ணினர். சிலர் அவன் கட்டைகள் தூக்கிச் செல்கின்றான் என்றனர். சிலர் அவன் நாய்களைப் பிடித்துக் கொண்டு சுற்றிக்கொண்டிருக்கிறான் என்று எண்ணினர். கருப்பு மானின் மீது கொடிகொண்டு இவர்ந்து செல்கிறான் என்று இந்தியர்கள் எண்ணினர்.

சிலர் அங்கு ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை. ஆனால் குரங்குகள், முயல்கள், நண்டுகள், பூனைகள், நாய்கள், கழுதைகள் முதலியன இருக்கின்றன என்று எண்ணினர். சிலர் அங்குப் பூதங்கள் இருப்பதாக எண்ணினர். என்னே மக்களின் கற்பனை !!

ஆனால் இன்று நாம் கற்பனைக்கதைகளை நம்புவதில்லை. நிலவு கடவுள்களின் ஊர்தி என்று நினைக்கவும் வேண்டா. அதை இனி மேல் வணங்கவும் கூடாது. சிவனின் தலையில் அஃது அமர்ந்திருக்கின்றது; அஃது இன்றும் அங்கேயே இருக்கிறது என்று யாராவது

கூறினால், அவர்கள் முழுக்க முழுக்கப் பொய்யர்கள். சிவனின் தலை மேல் நிலவும் இல்லை. நிலவின்மேல் மாந்த இனமும் இல்லை. இன்னும் சில ஆண்டுகளில் மாந்தனுடைய காலடி அங்குப் படப்போகிறது. அப் பொழுது பழங்கதைகளையே நம்பி மூட நம்பிக்கைகளுக்கு அடிமையாகி வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள் என்ன கூறுவார்களோ?

நிலவைப் பார்த்தால்: நானூறு ஆண்டுகளுக்கு முன் கலீலியோ என்னும் அறவியல் அறிஞர் முதன் முதலாகத் தொலை நோக்கியைக் கண்டுபிடித்தார். அதைப் பயன்படுத்தி நிலவின் மேற்பரப்பை ஆராய்ந்தார். அங்கு மாந்தனும் இல்லை; நாயும் இல்லை. ஆனால் உயர்ந்த மலைகள், பெரும் பள்ளங்கள், அகலமான மண்வெளிகள் காணப்பட்டன. அகலமான இம்மண்வெளிகளுக்குக் "கடல்கள்" என்று பெயரிட்டார்.

இன்று ஆற்றல் வாய்ந்த பல தொலை நோக்கிகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் நோக்கினால் அக்'கடல்களில்' நீரில்லை என்பதை அறியலாம். பாலைவனத்தைவிடக் காய்ந்த இடங்கள் அவை. அவ்விடங்களில்தாம் மாந்தனைக் கொண்டு செல்லும் விண்வெளிக் கப்பல்கள் இறங்கவேண்டும். நிலவில் பாதிப்பாகத்தில் நீரில்லாக் கடல்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று "மெடிடரேனியன்" கடலைக் கொள்ளும் அளவு பெரியதாக இருக்கின்றது. இக்கடல்களின் ஓரத்தில் உயர்ந்த பாறைகள் இருக்கின்றன. இவைதாம் நிலவிலுள்ள மலைகள். நிலவிலுள்ள மிக உயர்ந்த மலை நிலத்திலுள்ள எவரெசுட்டு மலையைவிட உயரமானது.

இந்நிலவுலகம் பல மாறுதல்கள் அடைந்துகொண்டே வருகின்றது. காற்று, மழை, பனி முதலியவை நிலத்தின் தன்மையையும் உருவத்தையும் மாற்றிக்கொண்டே இருக்கின்றன பல்லாயிரம் ஆண்டுகள் முன்னிருந்த பூமி இன்று ஆயிரக்கணக்கான மாறுதல்கள் அடைந்து தென்படுகின்றது. ஆனால் கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் நிலவில் ஒரு மாறுதலும் இல்லை.

கதிரவனின் மிகுந்த வெப்பத்தாலும், குறைந்த வெப்பத்தாலும் சில சமையங்களில் மலைகள் பிளவு படலாம். ஆனால் இந்நிலை மிகுதியாக நடைபெறுவதில்லை. அது பிறந்தபொழுது இருந்த நிலையில்

தான் இன்றும் உளது. நிலவின் அமைப்பைத் தெரிந்து கொண்ட புலவர்கள் இனிமேல் ''முழு நிலவுபோல் முகம் படைத்தவளே!'' என்று வண்ணிக்க மாட்டார்கள் என்று எண்ணுகின்றேன்.

நிலவைப் பற்றிய புதிர்கள்: நிலவு எவ்வாறு தோன்றியது? புழுதியும் பல வளிகளும் முகில்போல் விண்ணில் சுற்றிக்கொண்டிருந்தன. அவைதாம் நிலவாக மாறியவை என்று சிலர் எண்ணுகின்றனர். பலகோடிக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் நிலத்திலிருந்து ஒருபகுதி, தனியேபோய் நிலவாக ஆகியிருக்கும் என்று சிலர் எண்ணுகின்றனர்.

நம் நில உலகைச் சுற்றிலும் ஒருவளி மண்டலம் இருக்கின்றது. இதில் பல்வகையான வளிகள், புழுதி, நீராவி முதலிய பல பொருள்கள் உள்ளன. ஆனால் நிலவைச் சுற்றி இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். சில வளிகள் நிலவைச் சுற்றி இருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் நிலவில் உயிர் கொடுக்கும் உயிர்வளி இல்லை என்று எல்லா அறிவியலாரும் கூறுகின்றனர்.

நிலவில் பல பள்ளங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பள்ளங்கள் எவ்வாறு தோன்றின? பெரிய விண்கற்கள் நிலவின் மேல்விழுந்ததால் அப்பெரிய பள்ளங்கள் ஏற்பட்டனவா? நிலவின் வெளிகளில் புழுதி படிந்துள்ளது என்று பலஅறிவியலார்கள் கூறுகின்றனர். சிலர் இந்தப் புழுதி ஒரு விண்வெளிக் கப்பலையே புதைக்கும் அளவுக்குப் படிந்திருக்கும் என்று எண்ணுகின்றனர்.

நிலவில் உயிருள்ள பொருள்களே இல்லை என்று எண்ணப்படுகிறது. ஆனால் எங்கோ ஒரு மூலையில் கண்ணுக்குத் தெரியாமல் உள்ள உயிர்கள் இருக்கலாம் என்றும் எண்ணப்படுகின்றது. மேற்கூறிய பல புதிர்களுக்கும் சரியான விடை இன்னும் தெரியவில்லை. விடைகளைக் கண்டுபிடிக்கப் பல விண்வெளிக்கலங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

இவ்விண்வெளிக்கலங்களில், பல ஆற்றல் வாய்ந்த புகைபடக் கருவிகள் பொருத்தப்பட்டு அனுப்பப்படுகின்றன. அவை மட்டும் அல்லாமல் அங்குள்ள ஒளியை, பருவ நிலையை பலவகை அழுத்தங்

களையுமறிய பல கருவிகள் பொருத்தப்படுகின்றன. இவ்விண்வெளிக் கணைகள் நமக்குப் பல உண்மைகளைத் தெரிவிக்கின்றன; தெரிவிக்கப் போகின்றன. மாந்தன் நிலவிற்குப்போக வேண்டுமென்றால் பல கட்டங்களை எதிர் நோக்கி வென்று செல்லல் வேண்டும்.

மாந்தன் நிலவிற்குச் சென்றால்: மாந்தன் விண்வெளிக்கணை அனுப்பும் தளத்திற்குப்போவோம். பெரும் "விண் வெளிக்கணை" ஒன்று நிறுத்தப்பட்டிருக்கும்; பலர் அதைச் சுற்றி வேலைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். பல மின் விளக்குகள் ஒளியை வெள்ளம் போல் வீசிக்கொண்டிருக்கும். அதிகாலை நேரம்; பகலவன் அப்பொழுதுதான் கிளம்பிக் கொண்டிருக்கிறான். விண்வெளிக்கணை புறப்படச் சரியாக நிற்கின்றது.

உள்ளே ஆறு இருக்கைகளில் ஆறு விண்வெளி மறவர்கள், தனிப் பட்ட விண்வெளி உடைகளை அணிந்து கொண்டு அமர்ந்திருக்கின்றனர். உள்ளே பச்சை விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன. இவ் விளக்குகள் விண்வெளிக் கப்பலில் எல்லாம் சரியாக இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. விண்வெளிக் கப்பலின் கீழ்ப்பகுதியில் இயக்கும் கருவிகளும் எரிபொருள்களும் வைக்கப்பட்டிருக்கும்; மேல் பகுதிதான் விண்வெளி மறவர்கள் இருக்கும் இடம்.

எல்லாம் சரி பார்த்த பிறகு விண்வெளி அலுவலகத்திலிருந்து விண்வெளிக்கணையை அனுப்ப ஆணை கொடுக்கப்படுகின்றது. கப்பலின் கீழ்ப் பாகத்தில் மிகு விரைவில் எரி வளிகள் எரிய கப்பல் மேலே பாய்ந்து செல்கின்றது.

உயரச் செல்லச் செல்ல: நிலத்திலிருந்து நிலவு ஏறத்தாழ 240,000 கற்கள் தொலைவில் இருக்கின்றது. விண்வெளிக் கப்பல் ஒலியின் விரைவை விட மிகுதியான விரைவுடன் மேலே செல்கின்றது. செல்லும்பொழுது அங்குள்ள (acclerometer) 2 சீரெடை காட்டும் போது விண்வெளி மறவனின் எடை இரு மடங்காகிறது. அஃதாவது நமக்குத் தெரியாத ஓர் எடை நம்மை அழுத்தும். உயரே 7, 8, 9 சீரெடைகள் காட்டும்பொழுது நம் முகத்திலிருந்து குருதி வரும். கண்ணால் பார்க்க முடியாது. மூச்சுவிட முடியாது. உடலின் எப்பாகத்தையும் அசைக்கக்கூட முடியாது. நம்மேல் அரைக் கல்லெடை (Ton) தாக்குவதுபோல் இருக்கும்.

திடீரென்று இந்த நிலை மாறுகின்றது. எரிந்து கொண்டிருக்கும் இயங்கி நின்று தனியாக கீழே விழுந்துவிடுகிறது. அழுத்தமானியின் குறிமுள் மீண்டும் "0" காட்டுகின்றது. இப்பொழுது எடையே தோன்றாது. ஒரு பறவையின் இறக்கையின் எடைகூட நமக்கு இருக்காது. விண்வெளிக்கப்பலில் இங்குமங்கும் செல்லலாம். ஒவ்வொரு விண்வெளி மறவனும் தன்தன் கடமையைச் செய்து கொண்டிருப்பான்.

உணவு: உணவைப் பற்பசைப் பிதுக்கிகளைப்போன்ற குழல் பிதுக்கிகளில் வைத்துக்கொண்டு போவார்கள். உண்ணும் பொழுது பிதுக்கியை அழுத்தி உணவை வாயால் இழுத்து உண்பார்கள். ஏனென்றால் ஒரு கண்ணாடிக் குவளையில் நீரை எடுத்துக் குவளையைத் தலைகீழாகக் கவிழ்த்தாலும் நீர் கீழே கொட்டாது. அங்கு எந்தப் பொருளுக்கும் எடையே இல்லை.

நிலவில்: நிலவின் மேலுள்ள வானம் எப்பொழுதும் கருப்பாகவே இருக்கும். அங்கே ஒரே அமைதி இருக்கும். ஒலி பரவுதற்கு அங்குக் காற்று இல்லை. கதிரவனின் ஒளி பட்ட இடமெலாம் அனலாகக் கொதிக்கும். படாத இடங்களில் ஒரே குளிராக இருக்கும். ஏனென்றால் வெப்பம் கூட பரவுவதில்லை. அங்கு இறங்கும் விண்வெளி மறவன் காற்றுப்பத உடை (Airconditioned) அணிந்திருப்பான். உயிர்ப்புக்காக உயிர்வளி அடைப்பான்கள் இருக்கும். பேசுவதற்காக சிறிய ஒலி பரப்புக்கருவியை வைத்திருப்பான். இக்கருவியின் மூலம்தான் அருகிலுள்ள தன் நண்பர்களுடன் பேசமுடியும்.

இவ்வாறு நிலவை அடைந்து அங்கு ஒரு தளம் அமைத்து அங்கிருந்து மற்ற கோள்களுக்குச் செல்ல மாந்தன் திட்டமிடுகிறான்.

தமிழ்நிலம் தழைத்து வள்ளுவம் வளர நேர்மை வழி காட்டும் தனித்தமிழ் அரசியல் கிழமை இதழ் விரைவில் எதிர்பாருங்கள்!

சிறுபாணாற்றுப் படையில்-

இரவலனும் புரவலனும்

(மு. வை. அரவிந்தன், எம். ஒ. எல்., அண்ணுமலைப்பல்கலைக்கழகம்)

சிறுபாணாற்றுப்படையில், பாணர்களிடம் உள்ள நல்லியல்புகளையும், வள்ளலிடம் இருக்கும் உயர்ந்த பண்புகளையும் நத்தத்தனர் புலப்படுத்துகின்றார். பாலும் தேனும் ஒன்று சேர்ந்து சுவையூட்டுவது போல், இரு வேறிடங்களிலும் உள்ள பண்புகள் ஒன்று சேர்ந்து அக்கால நாகரிகத்திற்கு அழகு செய்கின்றன. பல நூறு ஆண்டுகளாக வாழ்க்கைக் கலையில் தேர்ந்து விளங்கிப் பண்பட்ட மக்களிடம் மலர்ந்த சீரிய பண்புகளாக அவை உள்ளன.

பாணர்களுடன் வரும் விறலியரை,

'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்'

என்று நத்தத்தனர் அறிமுகப்படுத்துகின்றார். கலையும் அழகும் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணமானவை என்றும் எண்ணும் அளவிற்கு உலக இயல்பு இருந்து வருகிறது. கலை, அழகு, வறுமை-ஆகியவை ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் கலை நுகர்ச்சி, அழகு நாட்டம், செல்வச் செழிப்பு – ஆகியவை இருப்பின் ஒழுக்கம், திண்மை, கற்பு – ஆகியவை மக்களிடம் நிலைப்பது அரிது. கலைவன்மையால் சிறந்து, அழகால் மேம்பட்டு, வறுமையால் துன்புறும் விறலியர் கலையை நுகர்ந்து, அழகை விரும்பிச் செல்வத்தோடு வாழும் வள்ளலை நாடிச் சென்ற போதும் கற்புடையவராக விளங்குகின்றனர் என்பதை நத்தத்தனர் குறிப்பிடுகின்றார்; விறலியரின் மேன்மையையும் வள்ளலின் உயர்வையும் புலப்படுத்துகின்றார்.

கலைஞன் தன் கலையை முதலில் தானே சுவைத்து இன்புறுகின்றான் அவன் தன் கலையைச் செல்வமாகப் போற்றி, உயிராக மதித்து உணர்ச்சியோடு வாழ்கின்றான். எத்தகைய துன்ப நிலையிலும் கலை நெஞ்சம், கற்ற கலையை மறந்து விடுவதில்லை, நத்தத்தனர், பாலை நெடுவழியில் மரா மரத்தின் வரி நிழலில், களைப்பு மிகுதியால் தங்கி இருக்கும் போதும் பாண் மகன், யாழை முறையறிந்து பாடுகின்றான். அதனைக் கேட்டு மகிழ்ந்து, பாணர் தலைவன் வறுமைத் துன்பத்தையும் வழிநடையால் ஏற்பட்ட களைப்பையும் மறந்து இன்புறுகிறான்.(35-40)

கலைஞன், வறுமையால் துன்புறும்போது தான் கற்ற கலையை வெறுப்பதுண்டு; 'ஏன் இதைக் கற்றேன்' – என்று கலங்குவதுண்டு. ஆனால், கலையைக் கை விடவோ, புறக்கணிக்கவோ, அவனால் முடிவதில்லை. அவன் வாழ்வில் வறுமைத் துன்பமும், கலை இன்பமும் போராடும். போராட்டத்தின் இறுதியில் கலை இன்பமே வெற்றிபெறும். நத்தத்தனார் காட்டும் பாணர்கள் வாழ்விலும் வறுமைத் துன்பத்தைக் கலை இன்பம் வென்று விளங்குகின்றது.

வறுமைத் துன்பத்திலும், தகுதியற்றவரிடம் சென்று பாணர்கள் உதவி பெற விரும்பவில்லை. தம் தகுதியறிந்து உதவும் பண்புள்ளவரையே நாடிச்செல்லுகின்றனர்; தக்கவரைத் தேடிச் செல்லுகின்றனர்.

வளமான வாழ்வு பெற்று உயர்ந்து விளங்கும் பாணர்களிடம் உள்ள நற்பண்புகளையும் நத்தத்தனார் காட்டத் தவறவில்லை. நல்லியக் கோடனிடம் பரிசு பெற்றுச் செல்வச் செழிப்போடு திரும்பிவரும் பாணர்கள், வறுமையால் வாடி மெலியும் பாணர்களைக் காண்கின்றனர்; அவர்களின் வறுமை நிலைக்கு இரங்குகின்றனர். பாணர் தலைவன், அவர்களிடம் தானே முதலில் பேசித் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றான்; வள்ளலிடம் செல்லுமாறு கூறுகின்றான்; வள்ளல் இருக்குமிடத்தைக் கூறி, அங்கே செல்லுதற்குரிய வழிகளைக் கூறுகின்றான்; வள்ளலிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைக் கூறுகின்றான்; வறுமை நீங்கி வளம் பெறுவதற்குரிய எல்லாவற்றையும் கூறி ஊக்கமூட்டுகின்றான்.

இதுவரை இரவலரிடம் இருந்த சிறந்த பண்புகளைக் கண்டோம். இனி, இரவலரைப் புரக்கும் புரவலனின் இயல்புகளைக் காண்போம்.

நல்லியக்கோடனின் மறம்,கொடை ஆகியவற்றைப் புகழ்வதோடு நத்தத்தனார், 'பல்லியக்கோடியர் புரவலன்' (126) - என்று அவனைப் பாராட்டுகின்றார். கலைஞர்கள் தம் கலைத்திறனை அறிந்து பாராட்டுவோரின் புகழுரையைவிட வேறு எந்தப் பரிசையும் பெரிதாக மதிப்பதில்லை. கலைச்சுவை அறியாதார் நல்கும் பொருளைப் பெறும்போது கலைஞர்கள் மன நிறைவு கொள்வதில்லை. நல்லியக்கோடன் கலைச்சுவை மிக்கவன் என்றும் அவனிடம்பரிசு பெறுவதைக் கலைஞர்கள் பெரிதும் விரும்பினர் என்றும் குறிப்பாக உணர்த்துகின்றார் நத்தத்தனார்.

பாணர்கள், நல்லியக்கோடனைப் புகழ்ந்து பாடத் தொடங்குகின்றனர். புகழ் மொழிகள் சில கூறு முன்னரே நல்லியக் கோடன் பரிசு வழங்கி விடுகின்றான். (235). தன் சிறப்பை தனக்கு எதிரே பிறர்

புகழும்போது கேட்டுச் செம்மாந்து இறும்பூது எய்தும் புன்மைப்பண்பு நல்லியக் கோடனிடம் இல்லை. ‘சான்றோர் புகழுமுன் நாணுப’ (குறுந். 252) என்பது பழந்தமிழ்ப் புலவர்கள், சான்றோர்க்கு அமைத்த இலக்கணமாகும். நத்தத்தனார் நல்லியக் கோடனிடம் தன் புகழ் கேட்க நாணும் தகைமைப் பண்பு இருப்பதைக் குறிப்பிட்டு அவனைச் சான்றோர் என்று கூறாமல் கூறுகின்றார்.

நல்லியக் கோடன் தன்னிடம் வந்த பாணர்களுக்கு வழங்கும் முதற்பரிசு, தூய மெல்லிய ஆடையாகும். அந்த ஆடையின் மேன்மை, ‘மாசில், காம்பு சொலித்தன்ன அறுவை’ (336) என்று புகழப்படுகின்றது.

ஒருவனின் வறுமைத் தோற்றத்தை உலகத்திற்கு எளிதில் உணர்த்துவது, அவன் உடுத்தி இருக்கும் ஆடையேயாகும். பாணர்கள் கிழிந்த ஆடை உடுத்தி இருப்பதால் நாணி ஒதுங்குகின்றனர். செல்வச் செழிப்போடு விளங்கும் வள்ளலின் முன் தகாத தோற்றத்தோடு நிற்பதற்கு வருந்துகின்றனர். கலைஞர்களின் உள்ளத்தை மான உணர்ச்சி தாக்கித் துன்புறுத்துவதை வள்ளல் உணர்ந்து கொள்ளுகின்றான். அவர்களுக்கு நல்கும் முதற் பரிசாக உயர்ந்த மெல்லிய ஆடையை நல்குகின்றான்; வறுமையை விரட்டி அவர்கள் மானத்தைக் காக்கின்றான். தம் மானத்தைக்காத்த வள்ளலின் பெருந்தன்மையை உணர்ந்து பாணர்கள் போற்றுகின்றனர். தமக்கு ஆடை நல்கிச் சிறப்பித்ததை மறவாமல் முதலில் குறிப்பிடுகின்றனர். (136).

மற்றோர் உயர்ந்த பண்பும் நல்லியக்கோடனிடம் உண்டு. பாணர்களுக்குத் தரவேண்டிய பரிசில்களை எல்லாம் உடனே தந்து, அன்றே அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி விடுகின்றான். ‘அன்றே விடுக்கும் அவன் பரிசில்’ (261) என்று அப்பண்பு பெருமையாகக் குறிப்பிடப்படுகின்றது. தன்னைக் காண வருவோர்க்குக் காலம் குறிப்பிடுவது, குறித்த காலத்தில் வரினும் நெடுநேரம் வெளியே காக்க வைப்பது, காணும்போது சுடு சொல் கூறிக் கடுகடுப்பது, பரிசு தரும்போது தான் தரும் பரிசின் பெருமையைத் தானே புகழ்வது, பரிசு பெறுவோன் தன்னிடம் என்றும் நன்றியறிதலோடு நடந்து கொள்ள வேண்டும் என்று இடித்துக் கூறுவது - போன்ற கீழ்மைப் பண்புகள் நல்லியக் கோடனிடம் காண முடியாதவை. அதனால் அச் சான்றோனைப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் நினைக்கின்றோம்.

இன்னும் எத்தனை நாள்?

மு. மகிழரசன்.

தொன்று பெருமை துலக்கிய என்னரும் தென்றமிழர்
இன்று சிறுமை கலக்கிய இன்னலர் என்றலக்கண்
கொன்று கலக்கிடும் நெஞ்சிற் குறுகியான் கொண்டதுயர்க்
கென்று பெறுவர்கொல் ஏற்றம்? தமிழே எடுத்துரையே!

தொண்டு புரிந்து தொழும்பராய் இன்று தொடைநடுங்கிக்
கொண்டு, பிறர்முன் குறுகிக் குழைந்திடும் கூன்றமிழர்
பண்டு சிறந்து பயின்றநல் ஆட்சிப் பழம்பெருமை
கண்டு களித்தாளல் எந்நாள்? தமிழே கனிந்துரையே!

பெண்டுபிள் ளைகள் பெரும்பசி யாற்புறம் பேணமுழத்
துண்டுமில் லையாய்த் திகழ்ந்திடல் உற்றின்று துன்புறல்காண்!
உண்டும் உழைத்தும் பிறர்க்குவந் தூட்டியும் ஊர்புரந்த
கொண்டல் வளமை கொழித்திடல் எந்நாள் கொலோதமிழே!

உருவம் திரிந்தும் உரிமை இழந்தும் உணர்வொழிந்தும்
தெருவில் திரிந்தும் துயரம் உழந்தும் தெளிவிழந்தார்!
செருக்கின் திரிந்து செழுமையின் ஆண்டுச் சிரித்திருந்த(அ)த்
திருநாள் வரஎத் தனைநாள் தமிழே தெரிந்துரையே!

மானந் துறந்தரும் மாண்பு வறண்டு மதியழிந்து
நாணந் துறந்துநற் பண்புள நந்தமிழ் நாகரிகம்
பேணல் மறந்த பிழைஒழிந் தின்புறு பேற்றுநலம்
காணல் உறுநாள் அணித்தோ தமிழே! கணித்துரையே!

கழகம் நிறுவிக் கவின்பா வியம்தீட்டிக் கன்னித்தமிழ்
மொழியை வளர்த்த முதல்வர் வழிவழி மூச்சுணர்ந்தோர்
பழியிற் கிடந்துழல் பைந்தமிழ் தன்னைப் புரந்தருள
விழிதிறந் தெந்நாளில் வெல்வர் தமிழே விரைந்துரையே!

திகைவில் கிடக்கும் குருளைப் புலிகள் திரண்டுவரத்
தொகையாய்க் கிளம்பித் தொடர்தொட ராய்ப்பாய்ந்து [தோள்குலுக்கிப்
பகையை விரட்டிப் பழியைத் துடைத்துப் பதவிகொள்ள
வகையாய் ஒருநாள் வருவதெந் நாள்தமி ழேஇனியே!

குருதிச் சோகை நோய் (ANAEMIA)

சாரு. பாலகிருட்டிணன்.

இந்நோய் கண்டவர்கள் நமது நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இதற்கு முகாமையான காரணம் நல்ல ஊட்டமான உணவை மேற்கொள்ளாமையும், கல்வியின்மையும் ஆகும். நமக்குக் குருதி எவ்வளவு இன்றியமையாதது என்புதை அதன் வேலைகளைக்கொண்டே நாம் அறியலாம். உடல் நலமுள்ள ஒருவனுடைய உடல் பருமனில் $^{1}/_{11}$ பகுதியைக் குருதி ஆட்கொண்டுள்ளது. அஃதாவது 6 சீர்க் குடுவை (litre) அளவு உடையதாகும். இந்நோய் பல காரணங்களால் ஏற்படுகின்றது. அவற்றைப் பற்றி ஈண்டு ஆராய்வோம்.

குருதிச்சோகை நோய் என்றால் என்ன?

குருதியில் பொதிந்திருக்கும் செவ்வணுக்கள் அழிக்கப்பட்டு, எண்ணிக்கையில் குறைவதாலும், அல்லது செவ்வணுக்கள் குறைவாகத் தோன்றுவதாலும், நாக்கு உகிர் போன்ற உறுப்புகள் வெண்மை நிறமாகக் காட்சியளிக்கின்றன. பொதுவாக செவ்வணுக்கள் ஒருகனக் கீழ் ஆயிரம் கோல் (cubic. mm) குருதியில் 50,00,000 ஆகும். இந்நோய் பலகாரணங்களால் ஏற்பட்டாலும் அதைக் கீழ்க்காணுமாறு நான்கு வகைகளாகப் பிரிகின்றனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

முன்னிக ரில்லாத மூத்த குடியின் முழுத்திறனும்
தன்னிக ரில்லாத பீடும் புகழும் தழைத்திருக்க
அன்னை உனையே அரியணை மீண்டும் அமரவைக்கும்
பொன்னாள் வரஎத் தனைநாள் தமிழே புரிந்துரையே!

நாடு திருத்தி நகரைத் திருத்தி நலங்கருதிப்
பாடு பெருக்கிப் பசுமை துலக்கிப் பரந்தபுகழ்ப்
பீடு நிறுத்திப் புதுமை இருத்திப் பொலிவுறுத்தும்
ஈடும் எடுப்பும் இலாநாள் தமிழே எடுத்துரையே!

எந்தமிழ்த் தாயெழிற் புன்னகை பூத்திட எத்தனைநாள்?
எந்தமிழ் நாடு விடுதலை எய்திட எத்தனைநாள்?
எந்தமிழ் மக்கள்நல் வாழ்வினில் இன்புற எத்தனைநாள்?
எந்தமிழ்ச் சான்றோர் அறிய தமிழே இனிதுரையே! O

1. குருதி வீணுவதால் ஏற்படும் நோய் சோகை.
2. குருதியின் அமைப்புக் குறையால் ஏற்படும் நோய்.
3. சூலிகளுக்கு ஏற்படும் நோய்.
4. எலும்புச் சாறு (bone marrow) தோற்றக் குறைவால் ஏற்படும் நோய்.

1. குருதி வீணுவதால் ஏற்படும் சோகை நோய் :

(அ) வயிற்றில் புண்கள் (peptic ulcer) ஏற்பட்டிருப்பதாலும், கொக்கிப் புழுக்கள் (hook worm) அதிகமாக உடலில் இருப்பதாலும், வெட்டுப்புண் போன்றவையாலும் பெருமளவு குருதி சிந்தப்பட்டு, செவ்வணுக்கள் எண்ணிக்கையில் குறைகின்றன. இதைக் குறுதி சிந்தியபின் ஏற்படும் சோகை நோய் (post haemorrhagic anaemia) என்பர்.

(ஆ) குறுதியில் நச்சுப் பொருள்கள் கலந்திருப்பதாலும், குளிர் காய்ச்சல் (malaria) ஏற்படுவதினுலும் செவ்வணுக்கள் அழிக்கப் பட்டு இந்நோய் ஏற்படுகின்றது. இதை நச்சுத் தன்மையால் ஏற்படும் சோகை நோய் (Haemolytic anaemia) என்பர்.

2. குருதியின் அமைப்புக் குறைவால் ஏற்படும் நோய் :

(அ) இரும்புச்சாரம் உடலிலிருந்து குறைவதாலும், இரும்புச் சாரத்தை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதினுலும் இந்நோய் ஏற்படும்.

(ஆ) உயிரம் 'C' உயிரம் 'P' குறைவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

(இ) உயிரம் 'B_{12}' குறைவும் இந்நோயை உண்டாக்கும் இதை (Pernicious anaemia) பெர்னிசியசு குருதிச் சோகை என்பர். இவ்வகையைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் மிகவும் குறைவு. இது 40 அகவையிலிருந்து 60 அகவை உட்பட்டவர்களுக்குத்தான் ஏற்படும்.

3. சூலிகளுக்கு ஏற்படும் நோய்:

(அ) சூலிகளுக்குக் குருதி ஓட்டமாறுதல்களால் (altered circulatory conditions) குருதியின் அடர்த்தி குறைவதாலும்,

(ஆ) 'போலிக்' எனும் காடி (folic acid) தேவையான அளவு இல்லாமையாலும் இந்நோய் ஏற்படும்.

4. எலும்புச்சாறு தோற்றக் குறைவால் ஏற்படும் நோய்:

எலும்புச் சாற்றில்தான் செவ்வணுக்கள் தோன்றுகின்றன. ஆகையால் இவை தோற்றத்தில் குறைவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது.

இந் நோயின் அறிகுறிகள்:-

இந் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் சோர்ந்து கிடப்பர். இவர்தம் கண் இமைகள், நாக்கு, உகிர் போன்ற உறுப்புகள் வெண்ணிறமாகக்(pale)காட்சியளிக்கும் நெஞ்சத்துடிப்பு, அடிக்கடி மயக்கமுறுதல், நெஞ்சுவலி போன்ற குருதித் தொடர்பான கோளாறுகளும்; பசியின்மை, வயிற்றுவலி, கக்கல், மலச்சிக்கல் போன்ற செரிக்கும் நீர்க் குறைகளும்; தலைவலி, மனதை நிலைப்படுத்த முடியாமை,சினம்,வெறுப்பு போன்றஉணர்ச்சிகளை அடக்கமுடியாமை, போன்ற நரம்புக் கோளாறுகளும்; உகிர்கள் கரண்டி போன்று வளைந்தும் (koils-nychia) கால் வீக்கமும் இருக்கும்.

பெர்னியசு குருதிச் சோகை:-

தோலின் நிறம் பாதி வெண்மையாகவும், பாதி மஞ்சளாகவும் இருக்கும். நாவறண்டும், வழவழப்பாகவும் இருக்கும். செவ்வணுக்கள் குறைந்தும், உருவில் பெரியனவாகவும், மாறுபட்ட வடிவங்களுடனும் இருக்கும்.

நோய் அறிய உதவும் ஆய்வுகள்:-

1. நேர்முக ஆய்வு.
2. குருதி ஆய்வு.
3. கொக்கிப்புழுவிற்காக மல ஆய்வு.
4. சிறுநீர் ஆய்வு.
5. எலும்புச் சாறு ஆய்வு.

மருத்துவ முறைகள்:-

நோயின் அடிப்படைக் காரணங்களை அறிந்த பின்னரே அதற்கேற்ற மருத்துவ முறைகளை மேற்கொள்ளல் வேண்டும். தீயகமேந்தி

(64ஆம் பக்கம் பார்க்க)

பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னுலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

புரட்சித் தீ!

இரும்பொறை.

துஞ்சினும் சிறுபயன் தொலேந்திடும் என்றிவர்
தூணையும் புரட்டித் துவண்டனரே! - கொலே
நஞ்சினுங் கொடிய நெஞ்சுடை யாரால்
நாயினுங் கீழாய் வாழ்ந்தனரே !

வஞ்சிய ரோடவர் வளர்சிறு மக்களும்
வாய்மறந் தேயமு துழன்றனரே - தம்
பிஞ்சுகள் படுந்துயர் பெரியவர் கண்டதைப்
பேசவும் முடியா திருந்தனரே !

பஞ்செரி நிலேயில் படுந்துயர் கண்டும்
பார்த்தவர் சிறிதும் உருகிலரே ! - தம்
நெஞ்செரி துயரை நினைத்திவர் புலம்பினும்
நேர்வது நாளும் பெருந்துயரே !

கெஞ்சிட வேண்டா கெடுமதி யாளரைக்
கேட்பதி னுலொரு பயனிலேயே ! - நாம்
அஞ்சிட வேண்டா அரசினர் கொடுமைக்(கு)
ஆட்படுந் துயர்மிக வளர்வுறுமே !

எஞ்சிய நாளினும் எத்தனே நாள்? இங்(கு)
இருப்பினும் சாவது உறுதியதால் - இனி
மிஞ்சுவ ரேனும் வாழ்ந்திட நம்முயிர்
மேலிலே எனத்தீ மூட்டுவமே !

சாதல் நன்றே

திி. தமிழ்வேந்தன்.

அன்னைமொழி சாகடித்தார் ஆட்சி யாளர்;
அறங்கொன்றார் முறைகெட்ட நெறியிற் சென்று
பின்னைமொழி எங்கிருந்தோ கொண்டு வந்து
பீடுற்ற தமிழகத்தை உருக்கு லைத்தார்!
முன்னையுன் தலைமுறையோர் முயன்று காத்த
முதற்பொருள்கள் அழித்திட்டார் இவையுங் கண்டு
தென்னைமரம் நிற்பதுபோல் வாளா நிற்கும்
சீர்கெட்ட தமிழாநீ சாதல் நன்றே!

குமுகாயக் களைகள்

இராமசுவாமி, கோவில்புதூர்.

குற்றமே பேசிக் கொடுஞ்செயல்கள் செய்தேதாம்
பெற்ற சிறப்பின் பெருந்தகைமை – சற்றுணரார்;
எற்றிற்(கு) உரியர் இவர்? ஒன்றிங் குற்றக்கால்
விற்றற்(கு) உரியர் விரைந்து.

பொய்யையே மெய்யாகப் போற்றி நிலையிழிந்தார்;
மெய்யைப் பிறழ்ந்துணர்ந்து வேண்டாத – செய்வரால்;
எற்றிற்(கு) உரியர் இவர்? ஒன்றிங் குற்றக்கால்
விற்றற்(கு) உரியர் விரைந்து.

நன்மொழியாற் பேறு நலமுடைத் தென்றேய்த்துப்
புன்மொழியே பேசிப் பொலிந்தாரே – புன்மாந்தர்!
எற்றிற்(கு) உரியர் இவர்? ஒன்றிங் குற்றக்கால்
விற்றற்(கு) உரியர் விரைந்து.

பரந்த மனம்வேண்டு மென்றே மனத்தைக்
கரந்தநிலை மாறாமல் காத்துப் – புரந்தாரே!
எற்றிற்(கு) உரியர் இவர்? ஒன்றிங் குற்றக்கால்
விற்றற்(கு) உரியர் விரைந்து.

அறவுரை.

–புலவர், தி. நா அறிவுஒளி.

செம்மையை ஒட்டிவிட்டுச் செய்வினை ஆற்றாது
பொய்மையே போற்றிப் புறங்கூறி – வெம்மையே
இம்மையிற் செய்தால் இகழ்ந்திகழ்ந்து நம்நெஞ்சம்
நம்மையே பார்த்து நகும்!

தாளாண்மை ஊக்கம் தளராமை நம்பிக்கை
வேளாண்மை மேன்மை விழைவார்வம் – ஆளாண்மை
சான்றவரே மெய்யில் தகைசான்ற மாந்தராம்
ஆன்றறிக நற்றமிழர் ஆர்ந்து.

பேச்சுக்குக் கொள்கைப் பெருமுழக்கம் காட்டிப்பின்
முச்சுக்கு முச்சு முரண்படுவார் – பேச்சுக்குக்
கைதட்டிப் பின்பதனைக் கைவிடுவார் மாந்தரோ?
பொய்கொட்டி வாழ்வேன் புகல்?

ஆடாத கூத்தெல்லாம் ஆடித் தகுதியினைத்
தேடாமற் றேடிசிலர் சேர்ந்திருப்பார் – கூடாத
செய்கையும் கூசாமற் செய்திடுவார் மற்றவர்க்கோ
செய்க அறம் என்பார் செறிந்து!

கட்டுரை காட்டுவன்! புதுவை–நரசிம்மன்

வளர்தமிழ் அறிந்திடா வன்மகர் கூட்டம்
களர்நிலப் புல்லெனக் காட்சி யளிக்கும்
அன்னவர் காட்டிடும் ஆட்சியில் வாழ்தலின்
முன்னுள் முன்னோர் முடிவுற வாழ்ந்த
கடும்புலி ஆளும் காடு நன்றே!
கொடுமை வளர்த்திடும் கொடியவர் இன்றே
எல்லா நாடும் எழிலுற வாழ்த்தும்
நல்ல நெறிகள் நவில்தமிழ் நாட்டில்
அமைச்சர் ஆனார்; அறிவே இன்றி
நமையாள வந்தார்; நவிலநாக் கூசும்.
பலர்மலம் தின்னும் பன்றியை அழைத்துச்
சிலமலர் தின்றிடச் செந்நெறி பழக்கலாம்!
கூற்றுவன் பன்னனுய்க் கொடிய காட்டினில்
காற்றில் உணரும் கடும்புலி வளர்த்து
நன்றியைக் காட்டும் நாயென ஆக்கலாம்!
தின்றிடப் பாயும் சிறிய பூனை
கொன்றிடல் அஞ்சிக் குதிர்க்குள் மறையும்
எலியிவை இரண்டும் இன்முகம் காட்டி
நலிவே உணரா நண்பாய்ப் பழக்கலாம்!

கொடும்புலி ஆடு குளிர்நீர்த் துறையில்
அடுத்து நின்றே அன்பினைச் சொரிந்து
குளிர்நீர் பருகி வையம் முழுதும்
வளரும் தோழமை வளர்த்திடப் பழக்கலாம் !
பாம்பும் கீரியும் பக்கம் நின்று
தேம்பும் மழலை தேடும் தாயென
முத்தம் கொடுத்து முந்நீர் உலகிடைச்
செத்தும் மறவாச் சீரிய நட்பினைக்
காட்டப் பழக்கலாம்; காட்டும் உலகில்
கூட்டமாய் வந்து தமிழ்மொழி அழிக்க
நினைக்கும் கயவரை நினைத்தலும் கொடிதே'
திருந்தாத் தமிழனைத் திருத்தலும் அரிதே.
பிறப்பில் ஐயம் பேசும் உலகே
இறப்பின் நன்றும் இருந்தென் பயனும்
செந்தமிழ்க் கேடரைத் தீர்த்தல் முதல்தொழில்
வெற்றுரை பகரும் வீணர்க்குக்
கட்டுரை இன்றே காட்டுவன் நன்றே!

மறத்தமிழன் தானோ ?

தமிழ்ச்செழியன்—திருப்பனந்தாள்.

செங்கரும்புச் சாறுய்ச் சுவைக்கும் தமிழ்காக்கச்
சங்கெடுத் தார்த்து முழக்கஞ்செய் – மங்காத்
தனித்தமிழா! இன்றே கதிரோனுய்ப் பொங்கிப்
பனிப்பகையாங் கூட்டத்துப் பாய்!

உண்டுண் டுறங்குவதில் ஊக்கம் மிகக்கொண்டு
கண்ட மொழிக்கெலாம் கால்பிடித்துப் – பண்டு
சிறந்திருந்த பாவைத் தமிழழிக்கும் நீயும்
மறத்தமிழன் தானோ மொழி ?

செந்தமிழே வாழி !

த. செயராமன் – தஞ்சை.

பசுமையரு இளந்தமிழே ! பழஞ்சு வையே !
பண்பாடும் தமிழகத்தின் வளர்ச்சி யூற்றே!
விசும்பிலுறு முழுநிலவாய்ப் புலவர் நெஞ்சில்
விரிந்துவரு குளிர்தமிழே! ஒளிவி ளக்கே!

நசையற்ற பெரியோரும் விரும்பி யேற்கும்
நறுஞ்சுவைசேர் இன்றமிழே! தமிழ கத்தில்
இசைபெறவே முளைத்தெழுந்த முழுமுதலே!
ஏத்தவொண்ணு பெருந்தமிழே வாழ்த்து கின்றேன்!

மூவேந்தர் காலத்தில் முகிழ்த்தெ ழுந்து,
முடிவேந்தர் மடிவாழ்ந்து மூன்றை யேந்திப்,
பாவேந்தர் யாத்திட்ட இலக்கி யங்கள்
பலவேந்தி, இலக்கணங்கள் ஏந்தித் தேன்சேர்
பூவேந்திப் பொலிகின்ற சோலை போலப்
புகழேந்தி நிற்கின்ற தமிழே, உன்னை
நாவேந்தி வாழ்த்துதற்குச் சொற்க ளின்றும்
நனியேந்தி வாழ்த்தலுற்றேன் வாழி! வாழி!

தென்னவர்தம் குலவிளக்கு. கிருட்டிணமூர்த்தி-மானந்தகுடி.

தென்னவர்தம் குலவிளக்காய்த் திகழ்கின்ற மொழியே!
தேன்போன்றென் செவிக்கினிமை சேர்க்கின்ற தமிழே!
கன்னலென என்நாவில் கலந்தினிக்கும் அமிழ்தே!
கற்கண்டே நற்கனியே கலைமகளின் துணையே!
பன்னூறு மொழிகளிலும் பாங்குடைய மொழியே!
பார்புகழும் குறளமுதம் பரிந்தளித்த தாயே!
என்னுடைய நெஞ்சமிசை அன்னையுனை என்றும்,
எழுந்தருளச் செய்துபுகழ் இசைத்திடுவேன் இனிதே.

குற்றுலச் சாரல். "தென்கச்சி"-

தென்பொதிகை உச்சியிலே ஓசைவந்தது.
தேனருவி பாடிவரும் காட்சிவந்தது.
என்னுயிரே உன்மொழியைப் போலிருந்தது.
இவ்வுலகத் தொல்லையெலாம் போய்விழுந்தது.

பேரருவி தந்தநலம் நின்னதில்லையா?
பேறுபெற்ற தால்விளைந்த செல்வமில்லையா?
சாரல்எலாம் உன்தழுவல் இன்பமில்லையா?
சாய்ந்திருக்கும் உன்னுடலின் துள்ளல்இல்லையா?

ஐந்தருவி என்னுடலில் ஆடவில்லையா?
ஐம்புலனுல் நீகொடுத்த பாடமில்லையா?
பைந்தமிழில் கண்டதெல்லாம் உண்மையில்லையா?
படித்ததனுல் பொங்கிவந்த பெண்மையில்லையா?

முத்தமிழ்போல் புலியருவிப் பாடுகின்றது.
மூண்டுவிட்ட சோர்வகன்று ஓடுகின்றது.
முத்தனையும் புன்சிரிப்பைக் காட்டுகின்றது.
முகமலரே உன்செயல்போல் வாட்டுகின்றது.

பழையருவி உன்னிடத்தில் பாடம்கேட்டதா?
பாவையுன்றன் மொய்குழலைப் பார்த்துக்கொண்டதா?
இழையுமந்த அழகினிலே மயங்கிவிட்டதா?
இங்குவேண்டும் என்றுசொல்லி எடுத்துக்கொண்டதா?

செண்பகமும் உன்னிடத்தில் செய்திகேட்டதோ?
சீர்மிகுந்த உன்நடையைப் பார்த்துக்கொண்டதோ?
தண்மையுடன் தாவுகின்ற காட்சியில்லையோ?
தாவியென்னைப் பற்றுகின்ற மாட்சியில்லையோ?

சிற்றருவி உன்நகைப்பைச் சேர்த்துக்கொண்டதே!
சிரித்திருக்கும் ஓசைஅங்குக் கூடிநின்றதே!
வெற்றியென்ற பேரொலியைக் கூட்டுகின்றதே!
வீழ்ந்ததிங்கே துன்பமென்று காட்டுகின்றதே!

முள்ளிருக்கும் சூழ்நிலையில் பிறந்துவிட்டோமே!
முடர்வாழும் நிலத்தினிலே வளர்ந்துவிட்டோமே!
துள்ளிவரும் அருவியிலே துயரைவீசுவோம்.
தூவுகின்ற சாரலிலே நின்றுபேசுவோம்.

ஒரு நற்செய்தி

இலக்கியத் துறையில் ஒரு புதிய படைப்பு!

துரை-மாணிக்கம் எழுதிய

"நூராசிரியம்"

சுவடி 5. ஓலை 1 முதல் தொடர்ந்து வெளிவரும்.
உடனே தென்மொழியின் உறுப்பினராகுங்கள்.

அஞ்சாத்திறன் முத்துரெங்கராசன்—கோம்பை.

ஆரியப் படையை வென்றேம்;
அதிலொன்றும் பெருமை யில்லை!
கூரிய அறிவு நுட்பம்
கொண்டவர் மனத்தில் நம்மின்
சீரிய கொள்கை தோன்றச்
செயல்படத் தொடங்கித் தீயார்
ஆரினிப் பொருதி னாலும்
அஞ்சிடாத் திறனே நன்றாம்!

கடமையா தெனக்கேட் பீரேல்
கனித்தமிழ் காத்த லென்பேன்!
மடமையா தெனக்கேட் பீரேல்
வடமொழி போற்ற லென்பேன்!
உடைமை என்பதோ எ∴தென்றால்
ஒண்டமிழ் ஒன்றே என்பேன்!
அடைப்பகம் சென்ற போழ்தும்
அஞ்சிடேன் வினைசெய் வேனே!

(57ஆம் பக்கத் தொடர்ச்சி)

(halmo-globin) 20 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தால் அவ்வப் பொழுது குருதி உடலில் சிறிதளவு சேர்க்கப்படல் வேண்டும். இரும்புச் சாரக் குறைவிற்கு இரும்புச்சாரம் அடங்கிய குளிகைகளையும், கீழ்க் காணும் மருந்துகளையும் பயன்படுத்தலாம்.

1. Mixtura ferrous.
2. Mix. ferrous ammonium citrates.
3. Mix. ferrous phosphate.

சூலிகளுக்கும், உயிரம் குறைந்தவர்களுக்கும், போலிக் காடியுடன் கூடிய இரும்புச் சாரக் குளிகைகளும், ஈரல்பிழிவு (liver extract) எனும் ஊசி மருந்தும் கொடுக்கப்படுகின்றன.

பெர்னியசு குருதிச் சோகை நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உயிரம் B_{12} மிகுதியான அளவில் கொடுக்க வேண்டும். O

- அரசியல் என்பது இன்றைய புதுக் கண்டுபிடிப்பன்று!
- தமிழர்க்கு அது தொன்று தொட்டு வருகின்ற சீர்பெற்ற கொள்கை.
- மிகமிகப் பிந்திய உலகத்தின் அரசியல் கொள்கை, மிக மிக முந்திய காலத்திலேயே தமிழர் அரசியல் அறமாக வகுக்கப் பட்டிருக்கிறது.
- இவ்வுண்மைகளைத் தெளிவு படுத்தும் அரசியல் கிழமை இதழ்!

?

விரைவில் எதிர்பாருங்கள் !

தென்மொழிக்கு இரண்டாந்துணை!
முழு விளக்கமும் பின்னர்.
தென்மொழி.
கடலூர்-1.